59

Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | வைகாசி - 20 | 03-06-2003 | செவ்வாய்க்கிழமை | ஓசை 105

FUJIFILM
பொற்காலம்
வர்ணக் கலையகம்
வன்னி மக்களின் தேவைக்காக கணனி முறையில் 30நிமிடத்தில் புகைப்படச் சுருள் பிரதியாக்கல் (படங் கழுவுதல்)
Millennium Colour Lab
Studio / Video & Audio
Jaffna Road, Kilinochchi

# அரசின் பிரேரணைக்கு விளக்கமளிக்கும்
# பிரதமரின் இரண்டாவது கடிதம்

## நோர்வே வெளிவிவகார அமைச்சரூடாகக் கையளிப்பு

(கொழும்பு)

**விடுதலைப்புலிகள் கோரிய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பிற்குப் பதிலாக அரசாங்கம் முன்வைத்த புதிய பிரேரணைகளுக்கு மேலதிக விளக்கங்கள் அளிப்பதுபோன்றே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நோர்வேயின் வெளிநாட்டு அமைச்சர் பீற்றர்சன் ஊடாக விடுதலைப்புலிகளுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் அமைந்துள்ளது. விடுதலைப்புலிகள் இயக்கம் அரசாங்கத்தின் பிரேரணைகளை ஏற்கனவே நிராகரித்திருந்தமை தெரிந்ததே.**

அரசாங்கம் நேற்று முன்தினம் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு.

இந்த நிதியமைப்புத் தொடர்பாக தெரிவிக்கப்பட்ட யோசனைகள் வடக்கு-கிழக்கு பகுதிகளின் புனர்வாழ்வுக்கென வழங்கப்படும் நிதி சரிவர செலவிடப்படுவதை உறுதிப்படுத்துவதாக இருக்கும்.

வடக்கு-கிழக்கு புனரமைப்பு அபிவிருத்தி தொடர்பாக உத்தேச நிர்வாகக் கட்டமைப்பு நான்கு நோக்கங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

* அந்த அமைப்பு வெளிப்படையாகவும் பதில் சொல்லக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.
* வடக்கு-கிழக்கிலுள்ள சகல சமூகத்தவரினதும் நலன்களைப் பாதுகாப்பதாக இருக்க வேண்டும்.
* விடுதலைப்புலிகளுக்கு இதில் குறிப்பிடத்தக்க பங்கு இருக்க வேண்டும்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## பதவிவிலக வலியுறுத்து

(கொழும்பு)

சட்டவிதிகளுக்கு மாறாக பதவி வகிக்கும் வடமத்திய மாகாண முதலமைச்சர் பதவி விலக வேண்டும் என்று மாகாண ஆளுநரிடம் வடமத்திய மாகாண எதிர்க்கட்சித் தலைவர் ஆர். பி. அபேசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

மாகாண சபை ஒன்றில் ஏற்படும் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டுமாயின் மாகாணசபைத் தேர்தலின் போது சமர்ப்பிக்கப்பட்ட வேட்பு மனுத்தாக்கல் பத்திரத்தில் இடம்பெற்ற

(08ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுடன் பேச்சு நடத்த ஏற்பாடு செய்து தருக

## நோர்வேயிடம் ரணில் கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்கம் முன்வைத்துள்ள புதிய பிரேரணைகள் தொடர்பாக விடுதலைப்புலிகளுக்குத் தேவைப்படும் விளக்கம் அளிக்கவும், அவர்களின் கருத்துக்களைப் புரிந்து கொள்ளும் நோக்குடன் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருமாறு நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சனுக்கு சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

நேற்று முன்தினம் அனுப்பப்பட்டுள்ள கடிதத்துடன் இணைத்தே விடுதலைப்புலிகளுக்கு தமது பிரேரணைகள் குறித்த விளக்கக்கடிதத்தினையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அனுப்பிவைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் நோர்வேத் தூதுவர் நேற்று சிறிலங்கா வருகை

(கொழும்பு)

சிறிலங்காவுக்கான முன்னாள் நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் நேற்று சிறிலங்காவுக்கு வந்துள்ளார். இங்கு வந்துள்ள இவர் சிறிலங்கா பிரதமர் மற்றும் அமைச்சர்கள் சிலரையும் சந்தித்துக் கலந்துரையாடி உள்ளார்.

# விடுதலைப்புலிகளின் கோரிக்கைக்கு பிரதமரின் கடிதத்தில் பதிலில்லை!

## தமிழ்த் தேசிய கூட்டமைப்புப் பா.உ.ஜோசப் பரராஜசிங்கம்

உண்மையில் விடுதலைப்புலிகள் எதைக்கோரியுள்ளார்களோ அதைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொடுக்கவில்லையென விடுதலைப்புலிகளுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் அனுப்பி வைத்துள்ள கடிதம் தொடர்பாக பி.பி.ஸி க்கு கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள் தெரிவித்தார்.

நேற்றுசிறிலங்காப் பிரதமரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்துப் பேசியது தொடர்பாக பி.பி.ஸி க்குக் கருத்துத் தெரிவித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர், புலிகளின் அரசியல் ஆலோசகருக்கு பிரதமர் நேற்று முன்தினம் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் புலிகள் குறிப்பிட்டிருந்த பிரச்சினைகள் பற்றி பதிலளித்துள்ளார். இப்பதிலில் கூட பிரதமர் ஏற்கனவே கூறியுள்ள மூன்று விடயங்கள் பற்றித்தான் தெளிவுபடுத்தியுள்ளார். உதாரணமாக முக்கியமான அந்த உச்ச சபையில் விடுதலைப்புலிகளுக்கு பெரும்பான்மை கொடுக்கப்படும் என்பதை, அவர் அதிலே தெளிவுபடுத்தியுள்ளார். அத்தோடு அதிலே வருகின்ற ஏனைய அமைப்புகளிலும் புலிகளுக்கு கூடுதலான பிரதிநிதித்துவம் வழங்கலாம் என்றும் கூறியுள்ளார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

# டோக்கியோ மாநாட்டிற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி

(கொழும்பு)

டோக்கியோவில் இம் மாதம் 9ஆம், 10ஆம் திகதிகளில் இலங்கைக்கான உதவி வழங்கும் மாநாட்டினை நடத்துவதற்கு சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக ஜப்பானின் இராஜதந்திர வட்டாரங்களை ஆதாரம் காட்டிச் செய்திகள் வெளியாகியுள்ளன.

10000 முதல் 11000 கோடி ரூபா நிதியை வருடாந்த உதவியாக இலங்கை பெறுக் கொள்வதற்கு இந்த மாநாடு வகைசெய்யும் என்று கூறப்படுகிறது.

இந்த நிதியில் ஒரு பகுதி அரசாங்கத்தின் இலங்கை மறுமலர்ச்சித் திட்டத்திற்கும் வடக்கு-கிழக்

(08ஆம் பக்கம் பார்க்க)

# உழவு இயந்திரம் குடைசாய்ந்து கிணற்றினுள் வீழ்ந்தது

ஒட்டுசுட்டான் கூளாமுறிப்புப் பகுதியில் உழவு இயந்திரம் ஒன்று குடைசாய்ந்து கிணற்றுக்குள் வீழ்ந்துள்ளது.

மேற்படி சம்பவமானது நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

வீதிஓரமாக கைவிடப்பட்டநிலையில் இருந்த மேற்கட்டு இல்லாத கிணற்றுக்குள்ளேயே உழவு இயந்திரம் வீழ்ந்துள்ளது.

இது தொடர்பாகத் தெரியவருவதாவது, உழவு இயந்திரத்தைத் தள்ளி இயக்கஆரம்பித்து விட்டு திருப்புவதற்காக பின்னோக்கி உழவு இயந்திரத்தை இயக்கிய போது ஓட்டுநர் தவறுதலாக உழவு இயந்திரத்தின் வேகத்தைக் கூட்டியதால் வீதிஓரமாக பற்றைகள் செடிகளுக்குள் இருந்த கிணற்றுக்

(08ஆம் பக்கம் பார்க்க)

# வல்வெட்டித்துறையில் மறியல் நடத்திய மக்களுக்குப் படையினர் இடையூறு

## புகைப்படம் பிடிக்க ஊடகவியலாளருக்குத் தடை

(வடமராட்சி)

வல்வெட்டித்துறையில் நேற்று வீதி மறியல் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி மைதானத்திற்கு அருகில் புதிய இராணுவமுகாம் அமைக்கும் முயற்சியைக் கண்டித்தே இப்போராட்டம் நடத்தப்பட்டது.

காலை 9.30 மணிக்கு ஆரம்பமான இந்த மறியல் போராட்டம் ஒரு மணிநேரம் இடம்பெற்றது.

இம்மறியல் போராட்டத்தின் போது வடமராட்சி 524 ஆவது படையணித் தளபதி கேணல் ரத்நாயக்கா இந்த வீதியால் தம்மைச் செல்ல அனுமதிக்கக் கோரி போராட்டத்தில் ஈடுபட்டோருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். இதனால் வாகனத்தை வீதியால் செல்ல அனுமதிக்க முடியாது என வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டோர் இராணுவத் தளபதியுடன் வாக்குவாதம் செய்த

(08ஆம் பக்கம் பார்க்க)

# திருமலையில் வரதர் அணி உறுப்பினர் சுட்டுக்கொலை

(திருகோணமலை)

திருகோணமலை மையப்பகுதியில் மடத்தடியில் வைத்து ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் நேற்று இனந் தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கிருபன் என்பவரே இனந் தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளவராவார்.

கடற்காட்சிவீதியிலுள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணியின் அலுவலகத்திலிருந்து மடத்தடிப்பகுதியிலுள்ள தமது வீட்டிற்குச் செல்லும் வேளையிலேயே இவர் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகியுள்ளார்.

இவரது சடலம் தற்போது

(08ஆம் பக்கம் பார்க்க)

# மீனவர்கள் விடுதலை!

(மன்னார்)

மன்னாரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழக மீனவர்கள் 13 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

சட்டவிரோதமாக மன்னார் கடலோரப் பகுதியில் நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது, இவர்கள் கைது செய்யப்

(08ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். நகைக்கடை விடுதியில் தங்கியிருந்த இளைஞர் சடலமாக மீட்பு!

யாழ் நகரில் கஸ்தூரியார் வீதிப்பகுதியில் நகைக்கடை ஒன்றின் விடுதியில் தங்கி இருந்த இளைஞன் ஒருவர் சடலமாக நேற்றுக்காலை மீட்கப்பட்டுள்ளார். மட்டக்களப்பைச் சேர்ந்த விஜி (வயது-20) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் நகைக்கடைத்தொகுதியுடன் இணைந்த விடுதியில் தங்கி இருந்ததாகவும் நேற்று முன்தினம் இரவு படுக்கைக்குச் சென்ற இவர் நேற்றுக் காலையில் சடலமாக மீட்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

மரணவிசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. (27)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

செல்வநாயகம் கஜேந்திரன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை இல: 782580418 V புதுக்குடியிருப்பு, 7ஆம் வட்டாரத்தில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் புதுக்குடியிருப்பு ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (3226)

### விற்பனைக்கு

HONDA லான்சர் 90, HONDA லான்சர் 50 ஆகிய இரு மோட்டார் சைக்கிள்களின் எல்லா விதமான ஆவணங்களுடனும் மற்றும் LAP TOP Computer Pentium 3 (பாவித்தது) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பொன்னம்பலம் வைத்திய சாலைக்கு அருகாமை, அல்லது ஈழநாதம் பணிமனை, கிளிநொச்சி. (3300)


# உலக சூழல் தினத்தை முன்னிட்டு கரைச்சிப் பிரதேசத்தில் கருத்தரங்குகள்

(அலுவலக செய்தியாளர்)

உலக சூழல் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பல பகுதிகளிலும் விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதன் முதற்கட்டமாக இன்று காலை 10 மணிக்கு பாரதிபுரம் மகா வித்தியாலயத்தில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் சூழலைப் பாதுகாப்பதன் அவசியம் பற்றியும் அவற்றை நாம் பாதுகாக்காவிடின் ஏற்படும் விளைவுகள் பற்றியும் எடுத்துக் கூறப்படவுள்ளது.

அத்துடன் மேற்படி கருத்தரங்கில் இப்பகுதியில் அதிகளவாக சூழல் அசுத்தப்படுத்தப்படும் இடங்கள் தெரிவு செய்யப்பட்டு அவற்றை சுத்தப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதுடன் மக்கள் மத்தியில் மரநடுகை, வன வளத்தைப் பாதுகாப்பது பொலித்தீன் பாவனையை தவிர்த்தல், கழிவுப் பொருட்களை உரமாக்கி மீள் பாவனைக்கு எவ்வாறு பயன்படுத்துவது என்பன தொடர்பாகவும் நீரை அசுத்தமடையாது பாதுகாப்பது போன்ற பல்வேறு விடயங்கள் பற்றிய பூரணமான விளக்கக் கருத்துக்கள் வழங்கப்பட்டு சூழல் மாசடைதல் தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அத்துடன் இதன் தொடர்ச்சியாக எதிர்வரும் 6 ஆம் திகதி வட்டக்கச்சி இராமநாதபுரம் கரைச்சிப் பிரதேச சபை உபபணிமனையிலும் அதனைத் தொடர்ந்து 7 ஆம் திகதி உருத்திரபுரம் மகா வித்தியாலயத்திலும் அதனையடுத்து 12ஆம் திகதி அக்கராயன் மகாவித்தியாலயத்திலும் எனப் பல்வேறுபட்ட இடங்களிலும் சூழல் தின விழிப்புணர்வு கருத்தரங்குகள் இடம்பெறவுள்ளன.

இக்கருத்தரங்குகளுக்கு அரச, அரசசாரா நிறுவனப் பிரதிநிதிகள் மற்றும் பல்வேறுபட்ட தரப்பினரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக்கலந்துரையாடலுக்கான நிதியுதவியை கரைச்சிப் பிரதேச செயலகம் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா,லோ)

# மதில்களை அமைக்குமுன் அனுமதியைப் பெறுக

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பகுதியிலும் ஏனைய பகுதிகளிலும் வீதி ஓர சுற்றுமதில்களை அமைப்பவர்கள் அதற்குரிய அனுமதியைப் பெற்று அதன் பின்னர் மதில்களை அமைக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

பிரதான வீதி உட்பட பல வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதால் பிரதான வீதி ஓரங்களிலும் ஏனைய வீதியோரங்களிலும் மதில்களை அமைக்க முன்னர் கரைச்சிப் பிரதேச செயலகத்தில் அனுமதியைப் பெற்றுக் கொள்ளுமாறு கட்டட ஆய்வாளர் பிரிவினர் அறியத்தந்துள்ளனர். இதன் மூலம் பின் விளைவுகளைத் தவிர்க்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (12)



திருகோணமலை மாவட்டத்தில் மகாபொல புலமைப்பரிசில் பெற்ற மாணவர்கள்

# முல்லை மாவட்ட கல்விநிலை மேம்பட ஆசிரியர் பற்றாக்குறை நீங்கவேண்டும்

## முல்லை. வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்டத்தில் கல்வி நிலை மேம்பட வேண்டுமானால் ஆசிரியர் பற்றாக்குறை நீக்கப்படவேண்டும். 1004 ஆசிரியர்கள் தேவைப்படும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 506 ஆசிரியர்களே தற்போது கடமையில் உள்ளனர். தொண்டர் ஆசிரியர்களின் உதவியுடனேயே கற்பித்தலை நகர்த்திச் செல்கின்றோம் என முல்லை வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் சிவராசா தெரிவித்தார். கடந்த சனிக்கிழமை நடைபெற்ற மகாபொல புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரைநிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

முல்லை மாவட்ட உயர்கல்வி மாணவர்களுக்கு மகாபொல புலமைப்பரிசில் வழங்கும் வைபவம் கடந்த சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு அரச அதிபர் தலைமையில் ஆரம்பமானது. தமிழீழத் தேசியக் கொடியினை கடற்புலிகளின் மகளிர் அரசியல்துறையைச் சார்ந்த போராளி வளர்பிறை ஏற்றினார்.

சிறப்புரைகளை அரசாங்க அதிபர் இமெல்டா- சுகுமார், துணுக்காய் வலயப்பிரதிக்கல்விப் பணிப்பாளர் இராசேஸ்வரன், முல்லை வலயப்பிரதிக் கல்விப் பணிப்பாளர் சிவராசா, பல்கலைக்கழக மாணவர்கள் சார்பில் பேராதனைப் பல்கலைக்கழக கலைப்பீட முதலாம் வருட மாணவி செல்வி சிவரூபி, பேராதனைப் பொறியியல்ப்பீட மாணவன் எஸ். பிரபாகரன் ஆகியோர் நிகழ்த்தினார்கள். (20)

# மீளக்குடியமர அனுமதிக்கக்கோரி இடம்பெயர்ந்தோர் ரணிலுக்கு மனு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு பகுதியில் இருந்து இடம்பெயர்ந்திருக்கும் மக்களை மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரி இடம்பெயர்ந்தோர் முகாங்களில் தங்கி இருப்போர் இன்று சிறிலங்காப் பிரதமருக்கு மனு ஒன்றினை அனுப்பி வைக்க உள்ள னர்.

கடந்த 20ஆம் திகதி யாழ். செயலகத்தின் முன்பாக இடம்பெற்ற மறியல் போராட்டத்தை அடுத்து இன்று வரையில் இவர்கள் மீள் குடியமர நடவடிக்கை எடுக்கப்படாததை அடுத்தே பிரதமருக்கு இம் மகஜர் அனுப்பப்படவுள்ளது.

இந்த மனு யாழ். அரச அதிபர் மூலம் அனுப்பப்படவுள்ளது.

இதேவேளை, தென்மராட்சி தெற்கில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர உதவுமாறு இலங்கைக்கான வெளிநாட்டு தூதரகங்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி தெற்கு விவசாய சம்மேளனம் இந்தக் கோரிக்கை அடங்கிய மனுவை அனைத்து வெளிநாட்டுத் தூதுதரகங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

# புதுக்குடியிருப்பிலிருந்து குமுழமுனை வரை பேருந்து சேவை நீடிப்பு

புதுக்குடியிருப்பிலிருந்து செம்மலை செல்லும் பேருந்து சேவை குமுழ முனைவரை நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது.

இப்பேருந்து புதுக்குடியிருப்பிலிருந்து காலை 7.30 மணிக்கு புறப்பட்டு முல்லைத்தீவை வந்தடைந்து 9.45 மணியளவில் முல்லையிலிருந்து புறப்பட்டு அளம்பிலூடாக செம்மலை சென்று பின்பு குமுழமுனை சென்று அங்கிருந்து புறப்பட்டு முல்லைத்தீவை வந்தடைந்து முற்பகல் 11.00 மணிக்கு மீண்டும் அதே வழியூடாக குமுழமுனை சென்றடைந்து நண்பகல் 12.30 மணிக்கு குமுழமுனையிலிருந்து புறப்பட்டு முல்லைத்தீவை வந்த டைந்து 2.30 மணிக்கு புதுக்குடியிருப்பைச் சென்றடையும். (20)

# மாவட்ட மட்ட உதைபந்தாட்டத்தில் முல்லை. மகாவித்தியாலயம் வெற்றி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் முல்லைத்தீவு மகாவித்தியாலயம் வெற்றியீட்டி மாகாண மட்டத்திலான போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

கடந்த 30 ஆம் திகதி முல்லைத்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் இடம் பெற்ற இறுதிப் போட்டியில் பாண்டியன் குளம் மகா வித்தியாலயமும் முல்லைத்தீவு மகாவித்தியாலயமும் மோதிக் கொண்டன.

இதில் 4-0 என்ற கோல் கணக்கில் முல்லைத்தீவு மகாவித்தியாலயம் வெற்றியீட்டி மாகாண மட்டப்போட்டிக்குத் தெரிவாகியது. (20)

# இரவில் கரை திரும்ப அனுமதியின்மையால் யாழ். மாவட்ட மீனவர்களுக்குச் சிரமம்

(யாழ்ப்பாணம்)

மாலையில் மீன்பிடிக்கச் சென்று அடுத்தநாள் அதிகாலை 6.00 மணிவரை கரைக்குத் திரும்புவதற்கு அனுமதிக்கப்படாததால் தாம் பெரும் கஷ்டத்திற்குள்ளாவதாக யாழ். குடாநாட்டு மீனவர்கள் அமைச்சர் ராஜித சேனாரட்ணவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்த அமைச்சரிடம் மீனவர்கள் இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளனர்.

# காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலையை திறக்கவேண்டியது அவசியம்

## அமைச்சர் ராஜித சேனாரட்ண

(கொழும்பு)

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையை மீண்டும் திறக்க வேண்டியது யாழ்ப்பாண புனரமைப்பிற்கு அத்தியாவசியமான ஒரு அம்சம் என சிறிலங்காவின் அமைச்சர் ராஜித சேனாரட்ண கூறியுள்ளார்.

யாழ். குடா நாட்டில் தற்போது தனியார் துறையினரால் மாதந்தோறும் 40 ஆயிரம் சீமெந்துப் பக்கற்றுக்கள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகிறது. ஆனால் இந்தத் தொகை, தேவையை முழுமையாக பூர்த்தி செய்யக்கூடியதாக இல்லை என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.


## வற்றாப்பளை கண்ணகி அம்பாள் கோவில்

## முக்கிய அறிவித்தல்

**வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு தற்காலிகமாக வியாபார நிலையங்களை அமைத்தல்**

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு வீதியோரங்கள், சந்திகளில் தற்காலிகமாக வியாபார நிலையங்களை அமைப்பதற்கு உத்தேசித் துள்ளவர்கள் கரைதுறைப்பற்று பிரதேசசபையின் அனுமதியைப் பெற்ற பின்பே அமைக்கலாம் என்பதை அறியத்தருவதோடு, போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படுவதைத் தவிர்க்கும்படி பொதுமக்களும், வியாபாரிகளும் வேண்டப்படுகின்றார்கள்.

07.06.2003ஆம் திகதி தொடக்கம் 09.06.2003ஆம் திகதிவரை மூன்று தினங்களிலும் இறைச்சிக்கடைகள், மதுபானசாலைகள் தற்காலிகமாக மூடப்படவேண்டுமென்பதையும் அறிவித்துக்கொள்கின்றோம்.

**க. இராசையா,**
விசேட ஆணையாளர்,
கரைதுறைப்பற்று பிரதேசசபை,
முல்லைத்தீவு.

(சி-7891)

## வற்றாப்பளை கண்ணகி அம்பாள் கோவில்

## முக்கிய அறிவித்தல்



வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயப் பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு வியாபார நிலையம் அமைப்பவர்களுக்கான இடம் (பதிவு செய்தவர்கள், செய்யாதவர்கள் உட்பட) 4-6-2003 புதன்கிழமை மு.ப.10.00 மணிதொடக்கம் அளந்து வழங்கப்படும். உரியபணத்தினைச் செலுத்தி தங்களது நிலத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு வர்த்தகர்கள் வேண்டப்படுகின்றனர்.

**மு.குகதாஸ்**
தலைவர்

**பரிபாலன சபையினர்.**

(சி-8133)

# மியன்மரில் நெருக்கடி நிலை தலை தூக்கியது!
# சுகி அம்மையார் மீண்டும் கைதாகித் தடுத்து வைப்பு!!

## -மாணவர் கல்விக்கும் ஆட்சியாளர் தடை

**மியான்மரில் மீண்டும் அரசியல் நெருக்கடி தோன்றியுள்ளது. அந்நாட்டு எதிர்க்கட்சித் தலைவி இராணுவ ஆட்சியாளர்களால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் உள்நாட்டு மோதல்கள் இடம்பெறலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. இத்தகைய நிலையில் இதில் நடுநிலை வகிக்க ஐ.நா. விருப்பம் வெளியிட்டுள்ளது.**



மியான்மரின் நோபல் பரிசு பெற்ற சனநாயகவாதியும் அந்த நாட்டின் எதிர்க்கட்சித் தலைவியுமான ஆங்சான் சுகி கடந்த வெள்ளியன்று கைது செய்யப்பட்டுத் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

சனநாயக ஆதரவாளர்களுக்கும் அதற்கு எதிர்ப்பைத் தெரிவிப்பவர்களுக்கும் இடையே இடம்பெற்ற மோதலொன்றில் நால்வர் கொல்லப் பட்டதைத் தொடர்ந்து உருவான நிலைமைகளைக் கருத்தில் கொண்டே இவர் கைது செய்யப்பட்டதாக இராணுவ ஆட்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் உள்நாட்டுக் கலவரங்கள் வெடிக்கும் அபாயம் தோன்றியுள்ளது. இதனையடுத்து அனைத்துப் பல்கலைக் கழகங்களையும் கல்லூரிகளையும் காலவரையறையின்றி மூடிவிடுமாறு இராணுவ ஆட்சியாளர்கள் உத்தரவிட்டுள்ளனர்.

பல்கலைக்கழகங்களையும் கல்லூரிகளையும் மூடிவிடுமாறு விடுவிக்கப்பட்ட அறிவித்தலை நேற்றுக் காலை தங்களது கல்வி நிலையங்களுக்குச் சென்ற மாணவர்கள், கல்வியமைச்சு அதிகாரிகள் மற்றும் பொலிசார் மூலமாக அறிந்து திரும்பிச் சென்றனர்.

சனநாயகவாதியான ஆங்சான் சுகி ஆட்சிப் பீடமேறவிடாது தடுத்த இராணுவ ஆட்சியாளர்கள் அவரை நீண்ட காலம் தடுத்து வைத்திருந்து, பின் பெரும் நிர்ப்பந்தங்களுக்கு மத்தியிலேயே முன்னர் விடுவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, தற்பொழுது இவர் மீண்டும் தடுத்து வைக்கப்பட்டிருப்பதனை ஐ.நா.பொதுச் செயலாளர் கொபி அனான் வன்மையாகக் கண்டித்துள்ளார். மியன்மர் அரசு அதன் முரண்பாடுகளை தீர்த்துக்கொள்ளும் வண்ணம் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும். அதனடிப்படையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இதற்கு ஐ.நா.நடுநிலைவகிக்கத் தயாராக இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## றியாத் தாக்குதல் 11 பேர் கைது!

(றியாத்)

றியாத்தில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலின் பின்னணியில் இருந்த பதினொரு பேரைச் சவுதிஅரேபியா கைது செய்துள்ளது.

பொலிசார் ஏற்கனவே வெடிமருந்துகளையும் ஆயுதங்களையும் கைப்பற்றியுள்ளனர். பொலிஸாரின் தேடுதலின் போது இந்த ஆயுதங்கள் புனித நகரான மதீனாவில் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பிலிப்பைன்ஸில் பத்து நாள் யுத்த நிறுத்தம் அறிவிப்பு

(மணிலா)

பிலிப்பைனஸின் மோறோ இஸ்லாமிய விடுதலை முன்னணி என்ற தீவிரவாத அமைப்பு நேற்று முதல் பத்து நாள் யுத்த நிறுத்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளது.

கடந்த முப்பது வருடங்களாக இடம்பெறும் உள்நாட்டு யுத்தத்தால் ஒரு இலட்சத்து இருபதாயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

12,000 போராளிகளைக் கொண்ட மோறோ இஸ்லாமிய விடுதலை முன்னணி இம்மாதம் 12ஆம் திகதி வரை எந்தவித யுத்த நடவடிக்கைகளிலும் ஈடுபடப்போவதில்லை என்று முன்னணியின் பேச்சாளர் எயிட் கபாலு தெரிவித்தார்.

இந்த நடவடிக்கையை வரவேற்பதாகவும் சமாதான நடவடிக்கைகளுக்கு இது உந்து சக்தியாக அமையும் என பிலிப்பைன்ஸ் சனாதிபதி குளோரியா மெக்காவாலியா அராயு தெரிவித்துள்ளார்.



ஜி8 உச்சிமாநாட்டுக்காகச் செல்லும் உலகத் தலைவர்கள் சுவிற்சர்லாந்தின் ஜெனிவாவுக்கூடாக செல்வதைத் தடுக்கும் விதத்தில் வர்த்தக நிலையங்களை மூடி ஆர்ப்பாட்டம் இடம் பெறுகிறது.

## தென்னாபிரிக்க வறுமையைப் போக்க செல்வந்த நாடுகள் பின்னடிக்கின்றன

### -தென்னாபிரிக்க சனாதிபதி கண்டனம்

பிரான்சில் கூடியிருக்கும் உலகின் செல்வந்த நாடுகளின் மாநாடான ஜி-8 மாநாடு தென்னாபிரிக்காவின் வறுமையைப் போக்கத் தவறி வருவதாக தென்னாபிரிக்க சனாதிபதி தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவின் வறுமையைப் போக்குவதற்கான செயற்றிட்டங்கள் இதுவரை ஆக்கப்படவில்லை என்று மாநாட்டில் கலந்து கொள்ளும் செல்வந்த நாடுகளின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆயினும்; தென்னாபிரிக்காவின் வறுமையைப் போக்கும் ஆபிரிக்க அபிவிருத்தி புதிய பங்களிப்புத் திட்டம் என்ற திட்ட செயற்பாடு தற்போது ஆரம்பமாகியுள்ளது.

உலகின் வறுமையைப் போக்குவதற்கும் வறிய நாடுகளை மேலும் அபிவிருத்தி செய்வதற்குமான செயற்றிட்டங்கள் அதிகமாக மேற கொள்ளப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கொபி அனான் கேட்டுள்ளார்.

வறிய நாடுகளின் பிரச்சினையைச் சந்திக்க வருவதற்கு முன்னரே அப்பிரச்சினைகள் பூதாகரமாக எழுந்து எங்களைச் சந்திக்க வருகிறது என்று கொபி அனான் கூறியுள்ளார்.

இதேவேளை ஜி-8 மாநாடு உலகின் வறிய நாடுகள் மீது ஆதிக்கம் செலுத்தும் செல்வந்த நாடுகளின் செயற்பாட்டை ஒன்றிணைக்கிறது என்று இம்மாநாட்டை எதிர்ப்பவர்கள் தெரிவித்துள்ளனர்.

## இத்தாலியின் மூன்று தீவுகளில் 450 கள்ளக் குடியேறிகள் கைது!

(ரோம்)

இத்தாலிக்குச் சொந்தமான மூன்று தீவுகளில் களவாக வந்திறங்கியிருந்த 450 வெளிநாட்டவர்களை சனிக்கிழமையன்று இத்தாலி பாதுகாப்புப் பிரிவினர் கண்டுபிடித்துள்ளனர்.

இவர்களுள் 137 பேர் சோமாலியா நாட்டைச் சேர்ந்தவர்கள், 41 பேர் பாகிஸ்தான், இந்தியா போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள், மற்றும் 134 பேர் ஆபிரிக்காவைச் சேர்ந்தவர்கள். இன்னும் 59 பேர் ஈராக் மற்றும் நாடுகளைச் சேர்ந்தவர்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



அமெரிக்க பதில் பாதுகாப்பு அமைச்சின் செயலர் "போல் வொல்போவிஸ்" தென்கொரியா வருகை தருவதை ஆட்சேபித்து ஆர்ப்பாட்டம் நடத்தும் வேளை தமது முகாமருகே ரோந்தில் ஈடுபடும் அமெரிக்கப் பொலிசார்

## வளரும் நாடுகள் மீதுள்ள வர்த்தகத் தடைகளை வளர்ச்சியடைந்த நாடுகள் நீக்கவேண்டும்

### - இந்தியப் பிரதமர் கோரிக்கை

(புதுடில்லி)

வளரும் நாடுகள் மீதான வர்த்தகத் தடைகளை வளர்ச்சியடைந்த நாடுகள் நீக்க வேண்டும் என இந்தியப்பிரதமர் வாஜ்பாய் வலியுறுத்தியுள்ளார்.

ஜி-8 உச்சிமாநாட்டில் கலந்து கொள்வதற்காக சென்றுள்ள பிரதமர் வாஜ்பாயி உலகத் தலைவர்கள் பலரையும் சாதாரண முறையில் நேற்று முன்தினம் சந்தித்துப்பேசிய போது இவ்வாறு வலியுறுத்தியுள்ளார். பிரான்ஸ், மெக்ஸிக்கோ, சீனா, நைஜீரியா, மலேசியா, பிறேசில் உள்ளிட்ட நாடுகளின் தலைவர்களுடனும் பிரதமர் உரையாடியுள்ளார்.

சர்வதேச அளவில் செய்யப்படும் முதலீடுகளுக்கு சிறிய அளவில் வரி விதிப்பதன் மூலம் உலக நாடுகளின் வளர்ச்சிக்கான நிதியொன்றை ஏற்படுத்தவேண்டும் என்றும் இதனை வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்குப் பயன்படுத்த வேண்டும் என்றும் அவர்கேட்டுக்கொண்டுள்ளார்.

டோகா உலக வர்த்தகத் அமைப்புக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட வர்த்தகத் தடைகள் நீக்குவதற்கான தீர்மானங்கள் செயற்படுத்தப்படாமை குறித்து வாஜ்பாய் கவலை தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் ஹைதராபாத் நகரில் நிலவும் கடும் வெப்பம் (116 பாகை பரனைற்) காரணமாக முகத்தில் நீரைத் தெளித்து வெப்பத்தைத் தணிக்க முயலும் சிறுவன்






பல நகரங்களையும் மாநகரங்களையும் உள்ளடக்கியுள்ள சீனாவின் குபேய் மாநிலத்தில் அமைக்கப்பட்ட யாங்சி நதி நீர்த்தேக்கத்தில் திறக்கப்பட்ட கலுக கதவினூடாக நீர் சீறிப்பாய்கிறது.

# அருகிவரும் காட்டுமரங்களால் ஏற்படும் சூழல் மாற்றங்கள்

இயற்கை வளங்களுள் காட்டு வளமானது முதன்மையானதும் முக்கியத்துவமானதும் ஆகும், வளங்கள் என்பதை வரைவிலக் கணப்படுத்தின் பௌதீக சூழலுக்கேற்ப தாவரமானது இயற்கையாகவே அடர்த்தியாகவும் பரம்பியும் காணப்படும் தாவரம் செறிந்த பகுதி எனலாம். இக்காடுகள் அண்மைக் காலத்தின் மிக வேக மாக அழிந்து வருகின்றது. பல்வேறு தேவைகளின் நிமிர்த்தம் மனித நடவடிக்கையால் அழிவடைந்துசெல்லும்



தாவரப் போர்வையால் சூழல் பாதிக்கப்படுகின்றது. தாவரங்கள் குறை வடைந்து செல்வதால் ஏற்படும் சூழல் பாதிப்பை மக்களுக்கு எடுத்துக் கூறுதல் சிறப் பானது.

அந்த வகையில் காடுகளானது சூழலில் ஏற்படும் பல் வேறு இயற்கை மாற்றங்களுக்குக் காரணமாக இருப்பதுடன் பொருளாதாரத் தேவைகளுக்கும் அவசியமானதொன்றாக உள்ளது. இது மனிதனுடன் நேரடித் தொடர்பு கொண்டுள்ளதுடன் உணவு, உறைவிடம் மருந்து எரிபொருள் என்பவற்றுக்காக தனது ஒவ்வொரு பகுதியையும் மனிதனின் தேவைக்கென வழங்குகின்றது. பொருளாதார வளர்ச்சியிலும் அபிவிருத்தித் திட்டங்களிலும் இதனுடைய பங்களிப்பைக் காணமுடிகிறது. மேலும் காடுகள் மண்ணரிப்பைத் தடைசெய்கின்றன. பயிர்ச்செய்கையைப் பாதுகாக்கின்றன. வெள்ளப்பெருக்கைக் குறைக்கின்றன. தூய நீர் பெறுதலை உறுதி செய்கின்றன. மனமகிழ்ச்சியையும் பொழுதுபோக்கையும் தருகின்றன. வனவிலங்குகளுக்கு உறைவிடத்தைத் தருகின்றன. சூழல் மாசடைதலைக் குறைக்கின்றன. பொதுவாக சூழல் சீரடைவதற்கு எதிரான பாதுகாப்பாக அமைகின்றன. மனிதனுடைய தொழிற்பாட்டுக்கு உதவும் மரம் மரத்தின் அடிப்படையிலான கைத்தொழில் விளைபொருட்களையும், காட்டுப்பொருட்களையும் தருகின்றன. வேலை வாய்ப்பையும் தருகின்றன. அத்துடன் எரிபொருளாகவும் பயன்படுவதுடன் மண்ணில் ஈரலிப்புத் தன்மையைப் பேணுகிறது. சக்தியாக்கம், உணவு மண்ணின் பாதுகாப்பு, தாவரப்பாதுகாப்பு ஆகிய நோக்கில் காடு மிக முக்கிய இயற்கை வளமாகும்.

காலநிலையின் வேறுபாட்டிற்கேற்ப பரந்துள்ள இயற்கைக்காடுகளானது இன்று பெருகி வரும் சனத்தொகை யின் உணவு,உறைவிடம்,தொழில் வாய்ப்பு போன்ற தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் நாட்டின பொருளாதார வளர்ச்சிக்காகவும் அபிவிருத்தி நடவடிக் கைகளுக்காகவும் பெரிதும் அழிக் கப்பட்டு வருகின் றது.

இச்செயற்பாடுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட காட்டு வள அழிப்பினால் ஏற்பட்ட சூழலியல் மாற்றங்கள் இயற்கை சம நிலையின் தளம்பலைத் தோற்றுவிக்கின்றது. இவற்றால் ஏற்பட்ட பிரச்சினைகளை இன்று மனிதன் நேரடியாகப் பார்க்கின்றான். காட்டு வளத்திற்கு ஊறு விளைவிப்பதால் அவ்வளம் மட்டும்தான் அற்றுப்போகிறது என்று கூறமுடியாது. அது சூழலில் ஏற்படும் தாக்கங்கள் பல அவற்றை நோக்கின் இயற்கைச் சமநிலையைப் பேணுவதற்குப் பதிலாக தளம்பலை ஏற்படுத்துகிறது. உயிரினங்கள் வாழ்வதற்கேற்ப ஒரு சூழலை அமைக்கத் தவறிவிடுகிறது. கால நிலையில் மாற்றங்களை ஏற்படுத்துகிறது. வளமான மண் அரிக்கப்படுகிறது. கட்டுமானத் தேவைகளுக்கும் எரிபொருட்களுக்கும் பயன்படுத்துகின்ற மரங்கள் ஒரே நேரத்தில் அழிவடைகின்றன. இதனால் வளிமண்டலத்தில் காபனீரொட்சைடின் வீதம் அதிகரிக்கிறது. இதன் பாதிப்பினால் ஓசோன் படையில் துவாரம் ஏற்பட்டுள்ளது. மனித நடவடிக்கை காரணமாக காட்டுத் தாவரங்களுக்கு மட்டுமல்ல விலங்குகளின் வாழ்வுக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

மனிதன் சொந்த விருப்பத்திற்கேற்ப காட்டுவளத்தை அழிக்கின்றமையால் சுமார் 3000 மில்லியன் ஆண்டு காலமாக நிலவிய சூழலில் இயற்கைச் சமநிலை தகர்ந்துள்ளது. காடுகளை அழிப்பதனால் அரிய இன தாவரங்களும், விலங்குகளும் அழிகின்றன. காடழிப்பினால் ஏற்படுகின்ற மழைவீழ்ச்சி குறைவினால் நீர் சமநிலை பாதிப்படைகின்றது. காபனீரொட்சைட்டை உறிஞ்சப் போதிய தாவரங்கள் இன்மையால் வளிமண்டலத்தில் வாயுக்களின் சமநிலை தளம்புகிறது. சூரியனில் இருந்து வரும் கதிர்களை உறிஞ்ச காடுகளின்மையால் நேரடியாக வரும் கதிர்களால் பூமியில் வெப்பம் கூடும், ஆவியாக்கம் ஆவியுயிர்ப்புக்களில் ஏற்படும் மாற்றம் மழைவீழ்ச்சி, வெப்பநிலை, காற்றுக்களின் அளவு என்பவற்றில் மாற்றத்தை ஏற்படுத்துவதனால் சமநிலை பாதிக்கப்படும். இதன் விளைவாக சூழல் பாதிக்கப்படுகின்றது.காட்டுவளங்கள் அழிக்கப்படுவதன் காரணமாக உயிரியற் சூழலில் தாக்கம் ஏற்பட்டு நுண்ணங்கிகள் முதல் பெரிய விலங்குகள் வரை அழிகின்றன. இக்காடுகளுக்குரிய நுண்காலநிலையானது நேரடியாகவும் விரைவாகவும் பாதிப்புக்குள்ளாகிறது. இச்செயற்பாடு காலநிலையில் மறைமுகமான தாக் கத்தை ஏற்படுத்துகிறது. சூரியனில் இருந்து வீசப்படும் கதிர்களின் நேரடித்தாக் குதல்களுக்கு பூமி உட்படுகின்றது. இதனால் மனிதன் பல்வேறு நோய்களுக்கு ஆளாகிறான். மழைவீழ்ச்சி குறைகிறது, வரட்சி ஏற்படுகிறது, காடுகள் பரந்தளவில் அழிக்கப்படுவதனால் மண் உலர்ந்து வெடிப்புக்கள் ஏற்பட்டு அதனூடக மழை காலத்தில் நீரானது உட்சென்று அரிப்பை ஏற்படுத்துகிறது. மண்ணில் நீர் தேங்கி நிற்காது கழுவு நீராக வெளியேறுகிறது. இதனால் மண்ணில் உள்ள பசளை, சேதனைப் பொருட்கள்,கனியுப்புக்கள், கழுவப்பட்டு அசேத னப் பொருளாகி மண்ணின் வளம் குறைகிறது. நீரினால் அடித்துச் செல்லப்படும் மண் ஆறுக ளிலும் குளங்களிலும் படிவதால் அவற்றின் ஆழம் குறைந்து விடுகின்றது. மழை காலங்களில் நீர்தேக்க வழிகள் குறைவதனால் வெள்ளப்பெருக்கு ஏற்படுகிறது.

இலங்கையில் சேனைப்பயிர்ச்செய்கை, குடியிருப்புக்கள், பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பன வற்றிற்காக பெருந்தொகையானகாடுகள் அழிக்கப்படுகின்றன. 1900 ஆம் ஆண்டு 70% வீதமாக காணப்பட்ட காடுகள் நாட்டின் தேவைகளின் அதிகரிப்பினால் 1982ஆம் ஆண்டளவில் 25%மாக குறைந்துள்ளது.



எனவே நமது நாட்டின் நமது பிரதேசத்தின் காட்டுவளங்களை அழித்து இயற்கைச் சமநிலையை தளம்பலுக்கு உட்படுத்தாமல் முடியுமான வரையில் காடுகளை பாதுகாப்பது அவசியம். சூழலை மீள வளமாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் மனித நடவடிக்கையினால் சிக்க னமற்ற முறையில் மேற்கொள்ளப்பட்ட வன வளங்கள் அழிவினால் ஏற்பட்ட அனர்த்தங்கள் பல. இது வனங்களின் பாதுகாப்பு அவசியத்தை உணர்த்தியமையால் யூன் 05ஆம் திகதி சூழல் பாதுகாப்பு தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது. இது மக்களின் அபிவிருத்தி செயற்பாட்டின் ஒரு சிறந்த திட்டமாக நின்று வழிகாட்டுகிறது. வனவளம் பேணுவதன் மூலம் சூழல் சமநிலையைப் பேணுவது ஒவ்வொரு மனிதனதும் தலையாய கடமையாகும். இதன் மூலம் வளமான ஒரு சமுதாயம் உருவாகும்.

# சிறைக் கைதிகளின் அடிப்படை மனித உரிமை; விரிவான முறையில் ஆணைக்குழு ஆராய்வு!

(கொழும்பு)

சிறைக் கைதிகளின் மனித உரிமைகள் அடிப்படையிலான உத்தரவாதம் பற்றி தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு விரிவான ஆய்வொன்றை மேற்கொண்டுள்ளது.

இதனை முன்னுரிமை அடிப்படையில் தாங்கள் மேற்கொள்ள இருப்பதாக ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கையை மேற்கொள்வதற்கு பயிற்சி பெற்ற தகவல் சேகரிப்பாளர்களும் மேலதிக வசதிகளும் தேவைப்படுகின்றன. இத்திட்டத்தை மேற்கொள்வதற்கான நிதி வசதியைப் பெற்றுக் கொள்வதற்கென திறைசேரியிடம் விரைவில் பேச்சுக்கள் நடத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.




# யுனிசெவ் ஆதரவில் வெண்புறா நிறுவன மக்கள் விழிப்புணர்வு நடவடிக்கைகள்!

## வருமான அதிகரிப்புக்கும் ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

யுனிசெவ் நிறுவன அனுசரணையுடன் வெண்புறா செயற்கை உறுப்பு தொழில் நுட்ப நிறுவனத்தினால் மக்கள் மத்தியில் கண்ணிவெடி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு கடந்த மாதம் வீதி நாடகங்கள் வெடிபொருட் கண்காட்சிகளையும் நடத்தியுள்ளது.

வடமராட்சி கிழக்கு பளை உதவி அரச அதிபர் பிரிவில் 05 நாட்களில் 25 இடங்களில் வீதி நாடகங்கள் வெடிபொருட்கண் காட்சிகள், கிராமிய மட்டத்திலான விழிப்புணர்வுப் பிரச்சாரம் என்பவற்றை மேற்கொண்டுள்ளது.

அத்தோடு பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வு வசதிகளை ஏற்படுத்தும் பொருட்டு 10 பேருக்குக் கல்வி வசதி,04 பேருக்கு நன்னீர் மீன்பிடி வசதி, 02 பேருக்கு சைக்கிள் திருத்தக வசதி, 05 பேருக்கு வருமான அதிகரிப்பு என 21 பயனாளிகளுக்கும் 96,000 ரூபா பெறுமதியான பொருட்களை வழங்கியுள்ளதோடு பளை விழிப்புணர்வுச் செயலகத்தில் தட்டச்சுப் பயிற்சி நெறி ஒன்றினையும் நடத்தி வருகின்றது.

யுனிசெவ் நிறுவனத்தினால் கண்ணிவெடி விழிப்புணர்வை ஏற்படுத்தும் கண்ணிவெடிபட விளக்கமுடைய நேர அட்டவணைகளை வன்னியில் உள்ள 13 கோட்டக்கல்வி அலுவலகமூடாக 286 பாடசாலைகளில் கல்வி பயிலும் 64,400 மாணவர்களுக்கு விநியோகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா)

# மீள் குடியமர்ந்த மக்களின் கிணறுகள் புனரமைப்பு

கிளிநொச்சி விவேகானந்தா நகர்ப்பகுதியில் மீளக் குடியமர்ந்துள்ள பொதுமக்களின் கிணறுகள் கெயர் நிறுவனத்தினால் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

கிராமிய புனர்வாழ்வு நிறுவனமும் வன்னி அபிவிருத்தித் திட்டம் கெயர் நிறுவனமும் இணைந்து விவேகானந்த நகர்ப்பகுதியில் உள்ள மக்களின் 36 கிணறுகள் ஆழப்படுத்துதல் மற்றும் கிணறு கட்டுதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இவற்றைவிட 76 பயனாளிகளுக்கு சுயமானவருமானத்திட்டத்தின் கீழ்சுழற்சி முறைக்கடன்களும் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (பா)

# ரி–56 ரக துப்பாக்கியுடன் கொள்ளையர் குழு கைது!

எல்பிட்டிய பொலிஸ் பிரிவில் நீண்டகாலமாக பலகுற்றச் செயல்களையும் கொள்ளைச் சம்பவங்களையும் நடத்திவந்ததாகக் கருதப்படும் 12 பேர் அடங்கிய குழுவினரை ஆயுதங்கள், உபகரணங்கள், பல இலட்ச ரூபாய் பெறுமதியான பொருட்கள் என்பவற்றுடன் எல்பிட்டிய பொலிசார் கைது செய்துள்ளனர்.

மர்மமான முறையில் இயங்கிவந்த இக்குழுவினரை கைது செய்யும்நோக்கில் கடந்த மே 1ம் திகதி முதல் தென்மாகாண பொலிஸ்மா அதிபரின் தலைமையின் கீழ் நடவடிக்கையிலீடுபட்ட 11 பிரிவினர் மேற்படி கொள்ளைக்குழுவைக் கைதுசெய்துள்ளனர்.

கொள்ளைகள், வழிப்பறிக் கொள்ளைகள் போன்ற 25க்கு மேற்பட்ட சம்பவங்களில் தொடர்புடையதாகக் கூறப்படும் இக்குழுவினரிடமிருந்து 2 மோட்டார் சைக்கிள்கள் 4துவிச்சக்கர வண்டிகள்,தொலைக் காட்சிப் பெட்டி, செலுலர்கள், மரமரியும மின்வாள்,தங்கள் நகைகள் என 8 லட்ச ரூபா பெறுமதியான பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளது. சில நகைகள் அடகு வைக்கப்பட்டவை என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவர்களிடமிருந்து ரி.56 ரக துப்பாக்கி ஒன்று குண்டுகள், கூரிய கத்திகள், வாள்கள், இராணுவ சீருடைகள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# பிரயோக மென்பொருட்கள்

அறிவியல் உலகில்

மென்பொருட்களில் இன்னொருவகை பிரயோக மென்பொருட்கள் (Application soft ware) என அழைக்கப் படுகின்றன. இவை கணினியைப்பயன்படுத்துவோர் தமது தேவைக்கேற்ப பயன்படுத்தக்கூடிய வகையிலான செய்நிரல் களின் தொகுப்பாகும்.

இவற்றை இருவகையாகப்பிரிக்கலாம்.

1. பொதுப்பிரயோக மென்பொருட்கள் (General Application soft ware)
2. சிறப்புப் பிரயோகப் பொதிகள் (special Application pakages)

## பொதுப்பிரயோக மென்பொருட்கள்


கணினிகளை நாம் பொதுவான தேவைகளுக்காகப் பயன்படுத்தும் போது உபயோகிக்கப்படும் மென்பொருட்களை பொதுப் பிரயோக மென்பொருட்கள் என அழைப்பர். இவை குறிப்பிட்ட செயற்பாடுகளைச் செய்யும் எவரும் பயன்படுத்தக்கூடிய வகையில் செய்நிரல்களைக்கொண்ட தொகுப்பாக வெளியிடப்படுகின்றன. இவை பல்வேறு நிறுவனங் களால் பெருமளவில் தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு விடப்ப டுகின்றன. இம்மென் பொருட்களை எமது தேவைக்கேற்றவாறு கொள்வனவு செய்து அவற்றைப்பயன்படுத்திக் கொள்ளமுடியும். இவற்றை பிரயோகப்பொதிகள் (Application pakages) எனவும் அழைப்பர்.

இவற்றை நாம் பின்வருமாறு வகுக்கலாம்.

### 1) சொற்தொகுப்பு மென்பொருட்கள் (Word processing pakeges)


எம்.எஸ் வேர்ட் (Ms word)
வேர்ட் பேபெக்ட் (Word Perfect)
பப்பிளிசிங் பக்கேஜஸ் (Publishing pakages)

என்பனவற்றை இவ்வகைக்குள் கொண்டுவரலாம். இவற்றின் மூலம் எழுத்துக்கள், வரைபடங்கள், சில பொதிகளில் படங்கள், ஒலிகளைக்கூட இணைத்து ஆவணங்கள், வெளியீடுகள், புத்தகங்கள், செய்தித்தொகுப்புக்கள், வியாபார ஆவணங்கள் என்பனவற்றை உருவாக்கலாம்.





### 2. ஸ்பிரெட் சீற் (spread sheet)

இவை இலக்கங்களுடன் தொடர்பான அதாவது கணிப்பிடுதல், வரவு செலவுத்திட்டம் தயாரித்தல்,




சம்பளப்பட்டில் தயாரித்தல், பகுப்பாய்வு ஆவணங்கள் தயாரித்தல் அதுதொடர்பான வரைபடங்கள் தயாரித்தல் என்பவற்றுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. எழுத்துக்கள், எண்கள், என்பவற்றுடன் கணிப்பீடுகளுக்கான சூத்திரங்களும் இப்பொதிகளில் காணப்படும்.

### 3. டேற்றாபேஸ் (database)



தகவல் தொகுப்பு மென்பொருட்கள் இவையாகும். ஏராளமான தரவுகள் தகவல்களைச் சேமித்து அவற்றைத் தேவைக்கேற்றவாறு மாற்றியமைத்து தொகுத்து பெறக்கூடிய வகையில் இப்பொதிகள் ஆக்கப்படுகின்றன. அரசாங்கங்கள், முகவர் நிலையங்கள், தொழிற்சாலைகள் போன்றன தமக்குத் தேவையான பல இலட்சம் தகவல்களை இவற்றின் மூலம் சேமித்து வைத்து தேவையான போது பயன்படுத்திக் கொள்ளமுடியும்.

### கிராபிக் பக்கேஜஸ் (Graphics pakages)

இவை படங்கள், வரைபடங்கள் என்பவற்றைக் கையாளப் பயன்படுத்தப்படுகின்றன. இன்றைய நவீன பொதிகள், புகைப்படங்கள், வரைபடங்கள் என்பவற்றைக் கணினியின் உதவியுடன் தேவைக்கு ஏற்றவாறு கையாளப்பயன் படுத்தப்படுகின்றன. பல்லூடகங்கள் இணையம், கணினி விளையாட்டுக்கள், திரைப்படங்கள் என்பவற்றில் இப்பொதிகளின் பயன்பாடு அளப்பரியதாகும்.




### 5. இணையப் பக்கங்கள் தயாரிப்புக்கான பொதிகள் (Wep-page desigs program)

இவற்றின் மூலம் பல வர்ண ஆவணங்கள், வெளியீடுகள் தயாரிக்கப்பட்டு இணையத்தளத்திலே இணைக்கப்படுகின்றன.

### 6. வெப் புரோவ்சர் (wep browsers)

இணையத்தில் பயன்படும் வெப் புரோவ்சர்கள் இப்பொழுது பெருமளவு பயன்படுத்தப்படுகின்றது. இவை இணையத்தி லிருக்கும் விடயங்களைப் பார்வையிடப்பயன்படுகின்றன.

## சிறப்புப்பிரயோகப்பொதிகள்



இவை குறிப்பிடத்தக்க விசேட தேவைக்காக உருவாக்கப் பட்ட செய்நிரல்களைக் கொண்ட மென்பொருட்களாகும். உதார ணமாக பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், நிறுவனங்கள், தொழிற்சாலைகள், வங்கிகள், வைத்தியசாலைகள் என்பன தமது அமைப்பின் தேவைகளுக்கென விசேடமாக அமைத்துக்கொள் ளும் மென் பொருட்கள் இவ்வகைக்குள் அடங்குகின்றன.

இன்னொரு வகையான மென்பொருட்கள் கணினிகளில் பெரிதும் பயன்படுகின்றன. இவை பயன்பாட்டுச் சேவைச்செய்நிரல்கள் (Utilities of service program) எனப்படும்.

இவை கணினிகளை ஒரு கிரமமான ஒழுங்குமுறையில் கையாளப் பெரிதும் உதவுகின்றன.

உதாரணமாக
எடிட்ராஸ் (Editors)
பைல் மெயின்ரனன்ஸ் (file maintenanes)
பைல் கொப்பி (file copy) போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

சி.சிவபாலன்

---

# வவுனியா நலன்புரி முகாம்களிலிருந்து 1270 பேர் இம்மாதம் மீள்குடியமர்வு

வவுனியா நலன்புரி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளவர்களுள் 330 குடும்பங்களைச் சேர்ந்த 1270 பேர் மீள் குடியேற்றத்திற்கென கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார், வெண்கல செட்டிகுளம் பகுதிகளுக்கு இம் மாதம் செல்லவுள்ளனர்.

சொந்த இடங்களில் மீளக்குடியமர் வதற்கு நலன்புரி நிலையங்களி லுள்ள 455 குடும்பங்களைச் சேர்ந்த 1804 பேர் விருப்பம் தெரிவித்துள்ள நிலையில் மீளக்குடியமரக் கூடிய சூழல் அந்தந்த மாவட்டங்களில் ஏற்படும் பட்சத்தில் அவர்களை சொந்த இடங்களுக்கு அனுப்ப முடியும் என வவுனியா அரச அதிபர் அலுவலகம் தெரிவிக்கின்றது.

மேலும் கடந்த 29ஆம் திகதி 55குடும்பங்களைச் சேர்ந்த 236பேர் மீள்குடியேற்றத்திற்கென கிளிநொச்சி நகருக்கு வந்துள்ளனர். இன்று மூன்றாம் திகதி 114 குடும்பங்களைச் சேர்ந்த 319பேர் வவுனியா வடக்கு மற்றும் வெண்கலசெட்டிகுளம், பகுதிக்கு செல்லவுள்ளனர்.

எதிர்வரும் பத்தாம் திகதி 22 குடும்பங்களைச் சேர்ந்த 104 பேரும் 13 ஆம் திகதி 104 குடும்பங்களைச் சேர்ந்த 461 பேரும் மீள் குடியேற்றத்திற்கென மன்னார் செல்லவுள்ளனர்.

எதிர்வரும் 17ஆம் திகதி 35 குடும் பங்களைச் சேர்ந்த 160 பேர் யாழ்ப் பாணத்திற்கு செல்லவுள்ளனர்.

மேலும் முல்லைத்தீவு பகுதிக்கு 55குடும்பங்களைச் சேர்ந்த 226 பேரும் இம்மாத இறுதிக்குள் செல்லவுள்ளனர்.

# அரைக்கும் ஆலைக்கூரை தீயினால் அழிந்தது!

(வட்டக்கச்சி)

புளியம் பொக்கணைப் பகுதியில் அரைக்கும் ஆலையின் கூரை எரிந்து நாசமாகியுள்ளது. நாகலிங்கம் சந்திர குமார் என்பவருடைய ( உபதபால கம் முன்பாக அமைந்துள்ள) அரைக் கும் ஆலை கூரையே கடந்த புதன்கிழமை தீப்பிடித்துள்ளது.

வயலுக்கு வைத்த தீ காற்றி னால் தீப்பொறிகள் பறந்து கூரை முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. இயந்தி ரங்கள் எதுவும் பாதிக்கப்பட வில்லை. அயலவர்களின் உதவியி னால் தீ பரவலைத் தடுத்து நிறுத்தி இயந்திரங்களும் ஏனைய உபகர ணங்களும் பாதுகாக்கப்பட்டன. (12)

# எந்தவித சிக்கல்கள் ஏற்பட்டாலும் ஊவாமாகாண முதல்வராவது நானே!

## - பேர்ட்டி பிரேம்லால் திசாநாயக்கா

(கொழும்பு)

ஊவாமாகாண முதலமைச்சராக இருந்த சஷீந்ரவீரவன்னிக்கெதிராக உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பு மாதிரி துாக்கும் தீர்ப்பு வழக்கினா லும் இந்த சபையின் பதவிக் காலம் முடியும் வரை இயல்பாகவோ வசப் படுத்தியோ இப்பதவியைத் தாமே வகிக்கப்போவதாக வடமத்திய மாகாண முதல்வர் பேர்ட்டி பிரேம லால் திசாநாயக்கா தெரிவித்துள்ளார்.

அண்மையில் வேட்பாளர்பட்டி யலில் பெயரில்லாதவர்கள் மேற்படி பதவிவகிக்க நீதிமன்றம் தடை விதித்ததை அடுத்து ஊவா மாகாண முதலமைச்சர் பதவி பறிபோயுள் ளது. இந்நிலை வடமத்திய மாகாண முதலமைச் சருக்கும் ஏற்பட வாய்ப் புள்ளது தொடர்பாக அவர் மேற்படி கருத்துக் களை வெளியிட்டுள்ளார்.

பத்திரிகையாளர் சந்திப்பின் போது மேலும் அவர் தெரிவிக்கையில்;

வேறொரு தீர்ப்பை வைத்து எதிர்க்கட்சி தம்மை பதவிவிலகச் சொல்வதற்கு உரிமைகிடையாது. பதவி விலக வேண்டிய தேவையும் எனக்கு கிடையாது என்றார்.

# யாழ். மாவட்டத்தில் பாதுகாப்பு வலயம் தவிர்ந்த 989 பிரதேசங்களில் நிலக்கண்ணிவெடிகள் புதைப்பு!

## பலாலி இராணுவ தலைமையகம் தகவல்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்தில் உள்ள பாதுகாப்பு வலயம் தவிர்ந்த 989 பிரதேசங்களில் மிதிவெடிகள் பொறி வெடிகள் புதைக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தரவுகள் தெரிவிப்பதாக யாழ்.செயலகத்தில் இயங்கும் மிதிவெடிசெயல்திட்ட அலுவலகம் அறிவித்துள்ளது.**

இந்த மிதிவெடிப்பிரதேசங்களில் கிளிநொச்சியின் சில இடங்களும் ஆனையிறவுப் பகுதியில் சில இடங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதே வேளை உயர்பாதுகாப்பு வலயப்பிரதேசங்களும் கடற்படையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள இடங்களும் இவ்வரைபடத்தில் உள்ளடக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த மிதிவெடிகள் புதைக்கப்பட்ட வரைபடங்களினை அடிப்படையாகக் கொண்டே தற்போது மிதிவெடிகள் அகற்றப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தினால் புதைக்கப்பட்ட பிரதேசங்களாகக் கருதப்பட்ட 989 பிரதேசங்களின் வரைபடங்களைத் தேவையாயின் யாழ். செயலகத்தில் இயங்கும் மிதிவெடி செயல திட்ட அலுவலகத்தில் பெற முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிதிவெடிகள் புதைக்கப்பட்ட இடங்கள் தொடர்பான தரவுகளை எமக்கு வழங்கும்படி கேட்டுக்கொண்டமைக்கு இணங்கவே பலாலி இராணுவத் தலைமையகத்தினால் இவ்வரைபடங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் விடுதலைப்புலிகளிடமும் மிதிவெடிகள் புதைக்கப்பட்ட வரைபடங்கள் இந்த அலுவலகத்தினால் கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# கடும் வெப்பம் விரைவில் நீங்கும்!

தற்போது நாட்டில் நிலவும் கடும் வெப்பம் நிறைந்த சீதோஷ்ண நிலை அடுத்து வரும் சில தினங்களில் நீங்கி விடும் என வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

# படையினரின் முகாம்களை ஆராயும் பணி ஆரம்பம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் படை முகாம்கள் அமைக்கப்பட்டு இராணுவத்தினரின் பாவனையிலுள்ள பொதுமக்களின் வீடுகள், ஆலயங்கள் பொதுக் கட்டடங்கள் தொடர்பாக ஆராய மட்டு. மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் அமைக்கப்பட்ட குழு தனது பணியை கடந்த சனிக்கிழமை முதல் ஆரம்பித்தது.

இதன் முதல் கட்டமாக 233 வது படைப்பிரிவு அலுவலகம் அக்குழுவினரால் பார்வையிடப்பட்டது.

# முல்லைத்தீவு மாவட்டத்தில் நல்லின கால்நடை அபிவிருத்தி

நல்லினக் கால்நடைகளை அபிவிருத்தி செய்யும் வகையில் விசுவமடு, புதுக்குடியிருப்பு பிரதேசங்களில் கடந்த மே மாதம், 15 கால்நடைகளுக்கு செயற்கை முறையில் சினைப்படுத்தப்பட்டது.

பதின்மூன்று பசுக்களுக்கும் இரண்டு ஆடுகளுக்கும் இவ்வாறு செயற்கைமுறை சினைப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டதாக முல்லை. மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் குறித்த கால்நடை பண்ணையாளர்கள் நன்மையடைந்துள்ளனர்.

# தனது அரசியல் எதிர்காலத்தைச் சீர்குலைக்க தமது கட்சிப்பத்திரிகைகள் முயல்கின்றன

## பொ.ஐ. முன்னணி பா.உ. ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே

தமது அரசியல் எதிர்காலத்தை சீர்குலைப்பதற்காகத் தமது கட்சிச் செய்திப் பத்திரிகைகள் முயற்சி செய்துவருவதாக பொ.ஐ. முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே குற்றம்சாட்டியுள்ளார்.

ஊழல் மோசடிகள் மற்றும் தேசத்துரோக நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக உண்மைக்கு புறம்பான குற்றச்சாட்டுக்களைத் தனக்கெதிராக சுமத்த முயற்சித்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பத்திரிகையில் இவ்வாறான உண்மைக்கு புறம்பான குற்றச்சாட்டுகளை சுமத்தியிருந்தால் அதனை ஒரு பொருட்டாக எடுத்திருக்கப் போவதில்லை என்று குறிப்பிட்ட அவர், இந்தக் குற்றச்சாட்டை தமது கட்சி பத்திரிகையே சுமத்தியுள்ளமை கவலை அளிப்பதாகக் குறிப்பிட்டார்.

இந்த குற்றச்சாட்டுகள் தொடர்பாக கட்சியில் எந்த பதவியை வகிப்பவராக இருந்தாலும் சரி அல்லது சனாதிபதியாக இருந்தாலும் சரி தன்னுடன் பகிரங்க தொலைக்காட்சி விவாதம் ஒன்றிற்கு வருமாறு சவால் விடுப்பதாகவும் தெரிவித்தார்.

# ஜப்பானிய தொண்டு நிறுவனத்தால் பாடசாலைகள் புனரமைப்பு

(அலுவலக செய்தியாளர்)

பளைப் பிரதேசத்தில் ஆசியாவிற்கான ஜப்பானின் பாலம் என்ற (B.A.J) நிறுவனத்தின் நிதியுதவியுடன் பாடசாலைக் கட்டட வேலைகள், கிணறுகள் அமைத்தல் போன்ற வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேற்படி நிறுவனத்தின் நிதியுதவியுடனும் தமிழர் புனர்வாழ்வுக் கழக ஆதரவுடனும் பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்துடனும் இணைந்து சோரன்பற்று, இயக்கச்சி, தர்மாக்கேணி ஆகிய இடங்களில் பாடசாலைகள் புனரமைத்தல், மலசல கூடங்கள், புதிய கிணறுகள் அமைத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இவ்வேலைத்திட்டங்கள் இந்நிறுவனத்தினால் வன்னியின் முதல் தடவையாக ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (பா)

# திருமலை ப.நோ.கூ. சங்க அரிசி ஆலை இருபது வருடங்களின் பின் இயங்குகிறது!

(திருமலை)

1983ஆம் ஆண்டு யூலைக் கலவரத்தின் போது சிறிலங்காப் படையினராலும் சிங்கள இனவாதிகளாலும் அழித்தொழிக்கப்பட்ட திருகோணமலை ப.நோ.கூ.சங்கத்தின் அரிசியாலை இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் நேற்று முன்தினம் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

திருகோணமலை உப்புவெளி லவ் லேனில் உள்ள இந்த அரிசி ஆலை கடந்த இருபது ஆண்டுகளுக்கு முன்னர் அழிக்கப்பட்டது.

இந்த அரிசி ஆலை சிறிலங்கா அரசின் துணையுடன் அன்றைய காலப்பகுதியில் எரியூட்டப்பட்ட போதிலும் சிறிலங்கா அரசு குறித்த அரிசி ஆலையை இயங்க வைக்க எந்த நிதி உதவியையும் வழங்காத நிலையில் திருகோணமலை ப.நோ. கூ. சங்கத்தின் நிதியுதவியுடன் மீண்டும் இயங்க வைக்கப்பட்டுள்ளது.

# உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கு மதிப்பளித்து முதலமைச்சர்கள் பதவி விலக வேண்டும்

## – எதிர்க்கட்சித் தலைவர்கள் வற்புறுத்தல்

(கொழும்பு)

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை மதித்து வடமத்திய மற்றும் மேல் மாகாண சபைகளின் முதலமைச்சர்கள் பதவி விலக வேண்டும் என்று அந்த மாகாண சபைகளின் எதிர்க்கட்சித் தலைவர்கள் கேட்டுள்ளனர்.

முதலமைச்சராகப் பதவி வகிக்க தகுதியில்லை என்று தெரிந்து கொண்டும் பதவியில் இருப்பது சட்டத்தை மீறும் செயல் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

மாகாண சபைத்தேர்தலில் போட்டியிடாத ஒருவர் முதலமைச்சர் பதவியை வகிக்க முடியாது என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

இந்த நிலையில் முதலமைச்சர் பதவியை வகிப்பது நீதிமன்றில் தீர்ப்பை அவமதிக்கும் செயல் என மாகாண சபையில் எதிர்க்கட்சித் தலைவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# புரிந்துணர்வை மீறும் சிறிலங்காப் படையினர்; தமிழ் மக்கள் பெரும் விசனமடைவு!

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தின் காரைதீவு சிறிலங்கா விசேட அதிரடிப் படையினர் தாங்கள் யுத்த காலத்தில் மேற்கொண்டு வந்த தமது அடாவடித்தனமான சோதனை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை முதல் படையினர் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

மேற்படி வீதியால் வரும் பொது மக்களையும், வாகனங்களையும் கடுமையாகச் சோதனையிடுவதாகவும் மக்களின் அடையாள அட்டைகளும் பரிசீலனை செய்யப்படுவதாக காரைதீவு வாழ் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அத்துடன், கல்முனை, பாண்டிருப்பு போன்ற பிரதேசங்களில் இராணுவத்தினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். இதுவரை இவ் இராணுவத்தினர் நடமாடாத வீதிகளூடாகவும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

# ஓராண்டு நினைவலைகளில்

மண்ணகத்தில்

29 ♦ 08 ♦ 1938



விண்ணகத்தில்

14 ♦ 06 ♦ 2003

## அமரர் திரு. கந்தர் தங்கரத்தினம்

[இளைப்பாறிய அதிபர் திருமுறிகண்டி இந்து வித்தியாலயம், முன்னாள் அதிபர் நுண்கலைக்கல்லூரி புதுக்குடியிருப்பு]

*ஆண்டொன்று ஓடி மறைந்ததய்யா*
*ஈண்டு உம் பிரிவால் துயருறும் எமைத் தேற்ற*
*மீண்டும் மீண்டும் நீர் அவதரிக்க*
*வேண்டுமென இறைவனை இறைஞ்சுகின்றோம்.*

எமது குடும்பவிளக்காம் அன்னாரின் ஓராண்டு நினைவு வைபவம் நாளை 04-06-2003 புதன்கிழமை நினைவு கூருகின்றோம்.

தகவல்:
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

"அமுதாலயா"
வள்ளிபுனம்,
புதுக்குடியிருப்பு. (3295)

## சிந்தனைக்கு



நாம் ஒரு சத்திய இலட்சியத்தில் பற்றுக் கொண்டு உறுதி கொண்ட மக்களாக ஒன்று திரண்டு நின்றால், எந்தவொரு சக்தியாலும் எம்மை அசைக்கவோ, அழிக்கவோ முடியாது.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 03-06-2003

## அன்று முதல் இன்று வரை!

வடக்கு-கிழக்கின் இடைக்கால நிர்வாகம் முழுமையாக விடுதலைப்புலிகளிடம் வழங்கப்படுவதைத் தடுத்து நிறுத்தும் முயற்சியில் இந்திய அரசு முற்பட்டு நிற்பதாகவும், இது தொடர்பாகப் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் ஆகியோருடன் அது தொடர்புகளைக் கொண்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இத்தகவல்கள் உறுதிப்படுத்தப்படுமாயின் இந்தியா இன்னமும் தனது அரசியல் நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளவில்லை என்பதையே இவை வெளிப்படுத்துவதாய் இருக்கும்.

முதலில், சிறிலங்கா அரசாங்கம் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கவோ அன்றி விடுதலைப்புலிகளிடம் அக்கட்டமைப்பை கொடுப்பதற்கோ இது வரையில் முன்வரவில்லை என்பதே யதார்த்தமாய் உள்ளது. அரசியல் யாப்பிற்கு உட்பட்ட விதத்தில் மட்டுமே அபிவிருத்திப் பணிகளுக்கான நடவடிக்கைகளில் புலிகள் பங்காற்ற முடியும் எனக் கூறும் ஆட்சியாளர்கள் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு/சபை என்ற பேச்சுக்களை எடுக்கவே தயங்குகின்றனர்.

இந்நிலையிலும், இடைக்கால நிர்வாக சபை குறித்து இந்தியா ஒரு நிலைப்பாட்டை மேற்கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதாயின் இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா மௌனம் காக்கின்றது, பார்வையாளராக மட்டுமே உள்ளது எனக் கூறுவதெல்லாம் தவறானவையாகவே இருக்க முடியும். அதாவது, இந்தியா இராஜதந்திர ரீதியில் இனப்பிரச்சினை விவகாரத்தில் முழுக் கவனமும் செலுத்தி வருகின்றது என்பதே உண்மையாக முடியும்.

வடக்கு-கிழக்கின் இடைக்கால நிர்வாகமோ அன்றி, ஆட்சி அதிகாரமோ விடுதலைப்புலிகளிடம் முழுமையாகச் சென்று சேருவதை இந்தியா அன்று முதல் விரும்பவில்லை. விடுதலைப்புலிகளுக்கு இடைக்கால நிர்வாகம் போன்ற வற்றில் முதன்மை அளிக்க வேண்டியது தவிர்க்க முடியாதது என்பதை இந்தியா விளங்கிக் கொண்டிருப்பினும், விடுதலைப்புலிகள் தனித்து ஆட்சிப் பொறுப்பை ஏற்பதை அது விரும்பியதில்லை.

1987இல், இந்திய, சிறிலங்கா சமாதான உடன்பாட்டின் பின்னரும் இடைக்கால நிர்வாகம் பற்றிய பேச்சு எழுந்த போதும் இந்தியா இவ்வாறே நடந்து கொண்டது. உடன்பாட்டிற்கு முன்னதாக விடுதலைப்புலிகளுக்கு இடைக்கால நிர்வாக சபையில் பெரும்பான்மை அளிக்கப்படும் எனத் தெரிவித்த இந்தியா பின்னர் முன்னுரிமை அளிக்கப்படும் என்ற ரீதியில் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டது.அதாவது பெரும்பான்மை என்பதை முன்னுரிமை என மாற்றியதின் மூலம் அதிகாரம் புலிகளிடம் செல்வதைத் தடுக்க முனைந்தது.

இந்த வகையில் பார்க்கையில் ஒன்றரை தசாப்தம் கடந்துவிட்ட நிலையிலும் – அதாவது தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் விடுதலைப்புலிகளினால் சர்வதேசப் பரிமாணத்தைப் பெற்றுக் கொண்டபோதும் இந்தியா மாறவில்லை என்றே கூறலாம். இந்நிலையானது இந்தியா இனப் பிரச்சினை விவகாரத்தில் தனது நிலைப்பாட்டை இன்னமும் மாற்றிக் கொள்ளவில்லை என்பதையே வெளிப்படுத்துவதாய் உள்ளது.

ஆனால் இந்தியாவும் சரி, எந்தவொரு சர்வதேச நாடும் சரி, தமது நலன்களுக்காகவும், அபிலாசைகளுக்காகவும் பிற நாடுகளில் செல்வாக்கைச் செலுத்த முயல்வதுண்டு. இதில் சில நேரடியாக அரசாங்கங்கள் மீது செல்வாக்குச் செலுத்தித் தமது தேவைகளை, நோக்கங்களைப் பூர்த்தி செய்து கொள்கின்றன. சில நாடுகள் எதிர்த்தரப்பினர் மூலம் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்து தமது எதிர்பார்க்கையை நிறைவேற்றிக் கொள்கின்றன.

இத்தோடு இவ் அந்நிய சக்திகள் எத்தகைய உதவிகளை வழங்கினும் அதன் மூலம் அவை என்றுமே நட்டமடைவதில்லை. இவை தமது குறிக்கோள்கள், எதிர்பார்ப்புக்கள் என்பனவற்றையும் நிறைவேற்றிக் கொள்கின்றன. மாறாக, இந்நாடுகளின் ஆலோசனைகளை நம்பிச் செயற்படும் நாடுகளே நட்டமடைகின்றன. தீர்க்க முடியாத சிக்கல்களுக்கும் உள்ளாகி விடுகின்றன.

இந்தவகையில், சிறிலங்கா ஆட்சியாளர்களின் கடந்தகால நடவடிக்கைகள் சில இனப்பிரச்சினையை மேலும் தீவிரமாக்கியுள்ளதோடு சிக்கல்களையும் தோற்றுவிப்பதாகவே இருந்துள்ளன. அதிலும் குறிப்பாக இனப்பிரச்சினை விவகாரத்தில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசாங்கம் மேற்கொண்ட நிலைப்பாட்டிற்கு சர்வதேச ரீதியில் கிடைக்கப் பெற்ற ஆதரவும் இலங்கையை மிகவும் மோசமான பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளமைக்குக் காரணமாகும். அதாவது சர்வதேச ஆதரவு உண்டு என்ற ரீதியில் நடாத்தப்பட்ட யுத்தமே சந்திரிகா குமாரதுங்கவின் தோல்விக்குக் காரணமாகியது.

இதேபோன்றே சமாதான முயற்சிகளுக்கும் தற்பொழுது ஆலோசனைகள் பெறப்படுகின்றன. இவ் ஆலோசனைகளை வழங்குபவர்களில் பெரும்பான்மையினர் இனப்பிரச்சினைக்கான தீர்வை மட்டும் பரிந்துரைப்பவர்களாக இருப்பதில்லை. தமது விருப்பு வெறுப்புக்கள், தமது நாட்டின் நலன் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே அவை ஆலோசனைகளை வழங்குகின்றன. அவ்வாறு அவை வழங்கும் ஆலோசனைகள் பொருட்படுத்தப்படாமல் போகும் பட்சத்தில் அந்நாட்டுகள் நேரடியாகத் தலையிட முற்படுகின்றன. இத்தலையீடுகள் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் கொடுக்காதது மட்டுமல்ல, அவற்றின் போக்கையே மாற்றி விடுகின்றன.

## உள்ளூராட்சி சபை விசேட சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணான செயல்

### – உயர்நீதிமன்றில் முறைப்பாடு

(கொழும்பு)

உள்ளூராட்சிச் சபை (விசேட ஏற்பாடுகள்) திருத்தச் சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணானது என மனித உரிமைகள் அபிவிருத்தி என்பவற்றின் சட்டத்தரணிகள் சங்கம் உயர்நீதிமன்றத்தில் ஆட்சேப மனுத்தாக்கல் செய்துள்ளது.

வடக்கு கிழக்கில் எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவிருந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை பிற்போட்டு வேட்புமனுதாக்கல் செய்யாதகட்சிகளுக்கும், குழுக்களுக்கும் சந்தர்ப்பம் அளிக்கும் வகையில் புதிய வேட்பு மனு தாக்கல் செய்யும் வகையிலும் உள்ளூராட்சி சபை திருத்தச் சட்டமூலம் ஒன்றை அரசு கடந்த 20ஆம் திகதி பாராளுமன்றில் சமர்ப்பித்தது.

இந்தச் சட்டமூலத்தை அரசியலமைப்புக்கு முரணானது எனக் கூறி மனித உரிமைகள் அபிவிருத்தி என்பவற்றின் சட்டத்தரணிகள் சங்கம் உயர்நீதிமன்றில் ஆட்சேப மனுத்தாக்கல் செய்துள்ளது.

அரசியலமைப்பின் 3ஆவதும் 4ஆவதும் பிரிவு (இ) இற்கு முரணானது எனவும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன் தற்போது தாக்கல் செய்யப்பட்டுள்ள வேட்பு மனுவில் இளம்வயதையுடையோர் திருத்தச் சட்ட மூலத்தின்படி வேட்பு மனுத்தாக்கல் செய்யுமிடத்து 35 வயதை பூர்த்திசெய்திருப்பின் இளம் வேட்பாளராகக் கருதமுடியாது போகும். இது மனித உரிமை மீறலாகும் என சட்டத்தரணிகள் தமது மனுவில் தெரிவித்துள்ளனர்.

இச்சட்டமூலம் அரசியலமைப்புக்கு ஏற்புடையதா எனவும் சபையில் பெரும்பான்மையான ஒத்த கருத்தை உடையதாகிறதா எனவும் ஆய்வுசெய்தல் வேண்டும் என நீதிமன்று தீர்ப்புவழங்க வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

## புலிகள் வசம் இடைக்கால நிர்வாகம் செல்வதைத் தடுக்க இந்தியா முயற்சி!

(கொழும்பு)

வடக்கு-கிழக்கின் இடைக்கால நிர்வாகம் முழுமையாக விடுதலைப்புலிகளிடம் வழங்கப்படுவதைத் தடுத்து நிறுத்துதற்கு இந்திய அரசு முயற்சி செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இடைக்கால நிர்வாகத்தைப் புலிகளிடம் கொடுப்பதைத் தடுக்க சிறிலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலான பல்வேறு நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொண்டு வருகிறது. அமைச்சர் கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலமாகவும், நேரடியாகவும் சிறிலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் நடவடிக்கைகளில் இந்திய அரசு ஈடுபட்டு வருகிறது.

மலையக மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ராதாகிருஸ்ணனை இந்தியத் தூதரகத்திற்கு அழைத்து மேற்படி விடயங்கள் குறித்து தூதரக அதிகாரிகள் எடுத்துரைத்துள்ளனர். விடுதலைப் புலிகளிடம் முழுமையாக இடைக்கால நிர்வாகத்தை வழங்குவது நியாயமற்றது என்றும் அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளையும் இணைத்தே இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டுமென்றும் தூதரக அதிகாரிகளால் ஆலோசனை முன்வைக்கப்பட்டது.

அதேவேளை, அமைச்சர் சந்திரசேகரனுக்கும் இந்தியத் தூதரகத்திலிருந்து இவ்விடயம் தொடர்பாகப் பேசுவதற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

### – மகாபொல புலமைப்பரிசில் நிதிக்கு –

## 100 கோடி ரூபாய் வருமதி குறித்து சனாதிபதியுடன் அரசு பேச முடிவு!

(கொழும்பு)

மகாபொல புலமைப்பரிசில் நிதிக்கு சனாதிபதி நிதியிலிருந்து கிடைக்க வேண்டிய 100 கோடி ரூபா வருமதி குறித்து சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் தான் பேசவுள்ளதாக அமைச்சர் ரவிகருணா நாயக்க தெரிவித்துள்ளார்

மகாபொல புலமைப்பரிசில் வழங்கும் வைபவமொன்றில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்; மகாபொல புலமைப்பரிசிலின் தொகை எக்காரணம் கொண்டும் குறைக்கப்படக்கூடாது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

## ஆசிய கிராண்ட்ப்ரீ போட்டியின் 2 ம் கட்டம்; சிறிலங்காவுக்கு ஐந்து தங்கப்பதக்கங்கள்!

ஆசிய கிராண்ட்ப்ரி போட்டியின் இரண்டாம் கட்டம் நேற்று முன்தினம் இரவு கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நிறைவு பெற்றுள்ளது.

இதில் ஐந்து போட்டிகளில் சிறிலங்கா வீரர்கள் தங்கப்பதக்கங்களைப் பெற்றுள்ளனர்.

பெண்களுக்கான 100 மீற்றர் ஆண்களுக்கான 400 மீற்றர் ஆண்களுக்கான 3000 மீற்றர், பெண்களுக்கான 400 மீற்றர், ஆண்களுக்கான 400 மீற்றர் அஞ்சல் ஓட்டப் போட்டிகளில் சிறிலங்கா வீரர்கள் முதல் இடங்களைப் பெற்று தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தனர்.

முதலாவது வெற்றியை 100 மீற்றர் தூரத்தை 11.54 செக்கன்களில் ஓடிமுடித்து சுசந்திகா ஜெயசிங்க தன்வசமாக்கினார். 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதல் மூன்று இடங்களும் சிறிலங்கா வசமானது விசேட அம்சமாகும். இந் தியாவில் தவறிவிட்ட முதல் பரிசை தமயந்தி தச்சா இப் போட்டியில் வென்றார்.

100 மீற்றர் தடைதாண்டும் போட்டியில் இரண்டாவது இடத்தைச் சிறியானி குலவன்ச பெற்றுக் கொண்டார்.

## ஹெய்ன்சின் அதிரடித் துடுப்பாட்டம்; 7வது போட்டியிலும் மேற்கிந்தியத்தீவுக்கு வெற்றி!

மேற்கிந்தியத்தீவுகள், அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையே சென்ஸ்ஜோஸ்சில் நடைபெற்ற 7ஆவதும் இறுதியுமான ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்தியத்தீவு, அவுஸ்திரேலியாவை 09 விக்கெட் வித்தியாசத்தில் தோற்கடித்தது.


முதலில் ஆடிய அவுஸ்திரேலியா 50 ஓவர்களில் 08 விக்கெட் இழப்பிற்கு 247 ஓட்டங்களை எடுத்தது. இதில் லீமன் 107 ஓட்டங்களையும் பிரட்லீ 53 ஓட்டங்களையும் அன்ரூரீமென் 48 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கிறிஸ்கெய்ல்ஸ் 46 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு ஆடிய மேற்கிந்தியத்தீவு அணி 43.3 ஓவரில் 01 விக்கெட்டை மட்டும் இழந்து 249 ஓட்டங்களை எடுத்து வெற்றிபெற்றது.

துடுப்பாட்டத்தில் ஹெய்ன்ஸ் சிறப் பாக ஆடி 103 ஓட்டங்களையும் அணித்தலைவர் லாறா 75 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

21 ஒருநாள் போட்டிகளில் தொடர்ச்சியாக வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணியை ஏழு போட்டிகள் கொண்ட இத்தொடரில் கடைசி 3 போட்டிகளிலும் மேற்கிந்தியத்தீவு அணி வெற்றிபெற்றுள்ளமை சிறப்பம்சமாகும்.

மேற்படி தொடரின் முதல் நான்கு போட்டிகளிலும் அவுஸ்திரேலியா வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.




## பிரான்ஸ் பகிரங்க டென்னிஸில் கால் இறுதிக்குத் தகுதியான வீரர்கள்

பாரிசில் நடைபெற்றுவரும் பிரான்ஸ் பகிரங்க டென்னிஸ் போட்டிகளில் மகளிர் ஒற்றையர் பிரிவில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம், ஜெனிபர் கப்ரியாட்டி ஆகியோர் ரஷ்ய வீராங்கனைகளிடம் அதிர்ச்சித் தோல்வியடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற 4வது சுற்றுப் போட்டிகளில் வீனஸ் வில்லியம் ஸ்வேரா சுவேராவிடமும், கப்ரியாட்டி நாட்ற்றி செற்ரோவாவிடமும் வீழ்ந்தனர்.

அமெரிக்காவைச் சேர்ந்த லென்ஸ்சே லெவன்போட்டும் ஸ்பெயினில் கொஞ்சிதா மார்ட்டினாவுடனான போட்டியில் அரைவாசியும் விலகிக் கொண்டுள்ளார்.

எனினும் அமெரிக்காவின் நடப்புச் சம்பியனை செரீனா வில்லியம்ஸ் ஜப்பானின் ஸிக்கிஸியாமாவைத் தோற்கடித்து காலிறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் பிரிவில் அமெரிக்காவின் ஆந்திரே ஆகாஸி ஸ்பெயினின் கொலஸ்வோயா ஆகியோர் நான்காவது சுற்றுப் போட்டிகளில் வென்று காலிறுதிப் போட்டிக்குள் நுழைந்துள்ளனர்.

இரட்டையர் பிரிவில் இந்தியாவின் மகேஸ்பூபதி மாக்மிரினி ஜோடியும், லியாண்டர் பயஸ் செக் நாட்டின் டேவிட்ரிக்கி இணையும் கால் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளனர்.

# பாடசாலைக்கருகே முகாம் அமைத்தல்; அதன் வளர்ச்சிக்கு அச்சுறுத்தல்!

## சிதம்பராக் கல்லூரி அதிபர் கருத்து

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி மைதானத்திற்கு அருகில் முகாம் அமைக்கப்படுவதால் இப் பாடசாலை பெரும் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளது என்று கல்லூரியின் அதிபர் நடராசா அரியரத்தினம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

மிக நீண்ட காலத்துக்கு முன்பே இராணுவத்தினரின் அச்சுறுத்தல் காரணமாக இப்பகுதி மாணவர்களும், மக்களும் மிக மோசமான பாதிப்புக்களை அடைந்துள்ளனர்.

இராணுவ முகாம் அமைந்திருந்த காரணத்தினால் இப்பாடசாலை பலமுறை இடப்பெயர்வுகளைச் சந்தித்தது.

இப்பாடசாலையின் மாணவர் தொகை முன்பு ஆயிரத்து ஐந்நூறு ஆக இருந்தது. பின்னர் இடப்பெயர்வுகளையும் அச்சுறுத்தல்களையும் எதிர்நோக்கிய போது 45 மாணவர்கள் மட்டுமே பாடசாலைக்கு வந்தனர்.

மீண்டும் தற்போது மாணவர்களது தொகை படிப்படியாக அதிகரித்து 360 மாணவர்கள் தற்போது கல்வி கற்று வருகின்றனர்.

இவ்வாறான நல்லதொரு வளர்ச்சியைக்கண்டு வருகின்ற இச்சந்தர்ப்பத்தில் தற்போது அமைக்கப்படும் இராணுவ முகாம் நிச்சயமாக இப் பாடசாலை மாணவரது கல்வியை பல்வேறு வழிகளில் மோசமாகப் பாதிக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மாந்தை மேற்கு மக்கள் மீள்குடியேற்றம்

(மன்னார்)

மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கிராமங்களில் மக்கள் மீளக் குடியேறவுள்ளனர்.

நெடுங்கண்டன், அடம்பன் கிராமங்களில் 133 குடும்பங்களைச் சேர்ந்த 681 பேர் இவ்வாறு மீளக் குடியமர உள்ளனர்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நிக்கோட் திட்டத்துடன் இணைந்து மீளக்குடியமர்வுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.(மி)

### - கெயர் நிறுவனத்தால் -

# பூநகரிப் பிரதேசத்தில் சுயதொழிலுக்கு மானியம்

(அலுவலக செய்தியாளர்)

பூநகரிப் பிரதேசத்தில் கெயர் நிறுவனம் கிணறுகள் அமைத்தல், சுயதொழில் முயற்சிக்கு மானியம் வழங்குதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

பூநகரி சாமிக்குளம் பகுதியில் வன்னி அபிவிருத்தித்திட்டம் கெயர் நிறுவனம் தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்துடன் இணைந்து நான்கு பொதுக் கிணறுகளை அமைத்துள்ளதோடு 29 பேருக்கு கால்நடை வளர்ப்பு, 12 பேருக்கு சுயதொழில் கடன், 06 பேருக்கு மீன்பிடி உபகரணங்கள் என்பவற்றை வழங்கியுள்ளது.

அடுத்த கட்டமாக நெற்செய்கைக் கடன், பொது மண்டபங்கள் அமைத்தல் போன்ற வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதென தமிழர் புனர்வாழ்வுக்கழக கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (பா)

## கண்டெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி டிப்போ வீதியில் தேசிய அடையாள அட்டை ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கீரிமலைவீதி பண்டத்தரிப்பை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட செபஸ்ரீன் அன்ரன் ஜீவநாயகம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை, அலுவலக அடையாள அட்டை, பயணஅனுமதி அட்டை என்பன ஏ9வீதி கிளிநொச்சியில் அமைந்துள்ள ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளவும். (பா)

# கணினி கல்வி வாரம் கடைப்பிடிக்க வட -கிழக்கு பாடசாலைகளுக்கு அறிவிப்பு

## தனிச் சிங்களத்தில் கடிதம்

(திருமலை)

கணினிக் கல்வி வாரம் ஒன்றை நாடு முழுவதும் கடைப்பிடிக்கும்படி மனிதவள மேம்பாட்டு கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் இக் கணினி வாரம் கடைப்பிடிக்கப்படவுள்ளது.

இது தொடர்பான கடிதங்களை கல்வி அமைச்சு குறிப்பிட்ட பாடசாலைகளுக்குத் தனிச் சிங்கள த்தில் அனுப்பி வைத்துள்ளது.

இதனால் இப்பாடசாலை அதிபர்கள் பல் சிரமங்களை எதிர்நோக்கி உள்ளனர். (25)

# திருமலை பத்தினிபுரம் கிராமத்தில் வீடமைப்புத் திட்டம்

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பத்தினிபுரம் கிராமத்தில் மீளக்குடியமர்ந்துள்ளோருக்கான வீடமைப்புத் திட்டம் ஒன்றை தமிழர் புனர்வாழ்வுக் கழக திருகோணமலை மாவட்டச் செயலகம் அமைக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதற்கான அத்திவாரக்கல் நடும் நிகழ்வு எதிர்வரும் ஒன்பதாம் திகதி நண்பகல் நடைபெறவுள்ளது.

தம்பலகமம் பிரதேச செயலர் பிரிவில் பாலம்போட்டாறு எனும் பகுதியில் இக்கிராமம் அமைந்துள்ளது.

1990ஆம் ஆண்டு இராணுவ ஆக்கிரமிப்புக் காரணமாக இப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்து சென்று அகதிகளாக வாழ்ந்து வந்தனர். இவர்கள் மீண்டும் தற்போது பத்தினி புரம் கிராமத்தில் மீளக் குடியேறி உள்ளனர். (25)

# டோக்கியோ மாநாட்டில் பிரதிநிதித்துவம் பெறுவோர் யார்?

## உடன் அறிவிக்குமாறு ஜப்பான் பிரதமர் கோரல்

(கொழும்பு)

இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டில் இலங்கையில் இருந்து பிரதிநிதித்துவம் செய்வோரின் விபரங்களை உடனடியாக அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இது குறித்த பணிப்புரையினை ஜப்பானிய பிரதமர், சிறிலங்காவுக்கான ஜப்பானிய தூதுவருக்கு விடுத்துள்ளார்.

எதிர்வரும் ஒன்பதாம் திகதி ஆரம்பமாக இருக்கும் இம்மாநாட்டில் கலந்து கொள்வது தொடர்பாக விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு குறித்தும் ஜப்பானிய பிரதமர் இலங்கைக்கான ஜப்பானின் விசேட பிரதிநிதி யசுசி அகாஷியிடம் கேட்டறிந்துள்ளார்.

# கட்டுக்கரைக்குளம் புனரமைக்கப்பட்டது

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் பிரதான குளமான கட்டுக்கரை குளம் புனரமைக்கப்பட்டுள்ளது.

உலக வங்கியின் உதவியுடன் 25 மில்லியன் ரூபா செலவில் இக் குளம் புனரமைப்பு செய்யப் பட்டுள்ளது.

நீண்ட காலமாக இக்குளம் புனரமைக்கப்படாமல் இருந்ததால் இப்பகுதி விவசாயிகள் பெரும் பாதிப்பினை எதிர்கொண்டிருந்தனர்.

இக்குளம் புனரமைப்பினை தொடர்ந்து விவசாயிகள் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர். (மி)

# ரஞ்சித் கொலை விவகாரத்தில் இரகசியப் பொலிசாருக்குத் தொடர்பு?

தென்மாகாண அமைச்சர் ரஞ்சித்தின் கொலை விவகாரத்தில் பாதாள உலகக் கோஷ்டியினருக்கும் இரகசியப் பொலிஸ் அதிகாரிகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் இருப்பதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இக்கொலைச்சம்பவத்தில் தொடர்புடையதாகக் கூறப்படுகின்ற சூரிய வெவ பாதாள உலகக் கோஷ்டியின் தலைவருக்கும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவருக்கும் இடையில் தொடர்புகள் இருந்து எனக்கூறப்படுகிறது.

### அரசின்...

சிறிலங்காவின் சட்டங்களுக்கு முரண்படாததாக இருக்க வேண்டும்.

இந்தக் கட்டமைப்பு ஒரு பூர்வாங்க நடவடிக்கையாக அமைவதோடு அதன் பணியை செவ்வனே செய்வதற்கு போதிய நிர்வாக அதிகாரத்தையும் கொண்டிருக்கும். அந்த அமைப்பு முக்கிய பங்கை ஆற்றும் அதன் இணை நடவடிக்கை வடக்கு- கிழக்கில் சகல உடனடி மற்றும் நடுத்தர மற்றும் புனர்வாழ்வு புனரமைப்பு தொடர்பான தீர்மானம் எடுக்கும் செயற்பாடாகவும் இருக்கும்.

இந்த உயர் மட்ட அமைப்பு எவ்வாறு இருக்க வேண்டும் என்பது குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினருக்கிடையே பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும். விடுதலைப்புலிகள் இந்த உச்சக்கட்ட அமைப்பு தொடர்பான பேச்சுவார்த்தைகளின் போது பெரும்பாலான கருத்துக்களைத் தெரிவிக்க சந்தர்ப்பம் அளிக்கப்படும். இது முஸ்லிம், சிங்கள சமூகத்தவர்களின் நலன்களைப் பாதுகாப்பது தொடர்பாக இணங்கப்பட்ட அம்சங்களையும் கொண்டிருக்கும். புலிகள் வடக்கு-கிழக்கை அபிவிருத்தி புனர்வாழ்வு மனிதாபிமான செற்பாடுகள் குறித்து தெரிவித்த தமது நோக்கங்களை முழுமையாக அடைவதற்கு ஏற்ற வகையில் இந்த கட்டமைப்பு யோசனைகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

### வல்வெட்டித்துறை...

ளர். இச்சமயம் அங்கு பிரசன்னமாக இருந்த பாராளுமன்ற உறுப்பினரான எம்.கே.சிவாஜிலிங்கம் இராணுவத் தளபதியுடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

இதனைத் தொடர்ந்து மறியல் போராட்டத்தை ஏற்பாட்டாளர்கள் காலை 10.30 மணிக்கு நிறைவு செய்து கொண்டனர்.

இது இவ்வாறிருக்க, சிதம்பராக் கல்லூரி மைதானத்தில் முகாம் அமைக்கும் முயற்சிகளில் படையினர் தொடர்ந்தும் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

மறியல் போராட்டம் இடம்பெற்றுக் கொண்டிருந்த போது அங்கு கலகம் அடக்கும் பொலிசாரும், மேலதிக இராணுவத்தினரும் குவிக்கப்பட்டிருந்ததுடன், இராணுவப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த சில உறுப்பினர் கைக்குண்டுகளுடன் பொது மக்களுடன் ஒன்றாகக் கலந்து அசம்பாவிதங்களை ஏற்படுத்த முயற்சித்தனர்.

இச்சம்பவங்களின் போது புகைப்படம் எடுக்க முற்பட்ட குடாநாட்டு பத்திரிகையாளர் ஒருவர் இராணுவத்தளபதியால் தடுக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கம் ஊடகத்துறை அமைச்சருக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. (27-23)

### விடுதலைப்புலி....

ஆனால் பிரதமருடைய கடிதம் புலிகள் என்ன கேட்டார்களோ அதை அவர் கொடுப்பதாக தெரியவில்லை.

அக்கடிதத்தில் இடைக்கால நிர்வாகம் பற்றி பிரதமர் கூறவில்லை. விடுதலைப்புலிகளைப் பொறுத்தமட்டில் தங்களுக்கு ஒரு இடைக்கால நிர்வாக அமைப்பு வேண்டும் என்றுதான் தொடர்ந்து கூறிக் கொண்டு வருகின்றார்கள். அது சம்பந்தமாக அவர் தெளிவுபடுத்தவில்லை. பிரதமரை நாங்கள் சந்தித்துக் கதைத்த பொழுது கூடஇருந்த அமைச்சர் ஜீ.எல். பீரிஸிடம் நாங்கள் தெளிவாகக் கூறினோம். இந்த இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு என்ற சொல்லைப் பாவித்து அதற்கமைய ஏதாவது ஒரு திட்டத்தை நீங்கள் தீட்டி அதை புலிகளுக்கு அனுப்பலாம் என்று கூறினோம். அது அவர்களுக்கு ஒரு பிரச்சினையாக இருக்கின்றது. ஏனென்றால் அது அரசியல் அமைப்புடன் தொடர்புடைய விடயம். எனவே, அதைச் செய்வதன் மூலம் சில பிரச்சினைகள் ஏற்படலாம்.

உயர் நீதிமன்றத்திலே வழக்குத் தாக்கல் செய்யப்படலாம் என்று அவர்கள் கூறுகின்றார்களே ஒழிய அதைச் செய்யக்கூடிய வகையில் அவர்கள் சிந்திப்பதாக இல்லை. ஆனால், அவர்கள் கூறும்பதிலில் அப்படியான ஒன்று நாங்கள் கொடுத்திருக்கின்றோம். கிட்டத்தட்ட இதை நிர்வகிக்கின்ற பொறுப்பெல்லாம் புலிகள் செய்யக்கூடிய வசதிகள் இதில் இருக்கின்றன என்றும் கூறியுள்ளனர். ஆனால், இதில் அப்படி இருப்பதாகத் தெரியவில்லை.

அரசாங்கக் குழு ஒன்றை கிளிநொச்சி அனுப்பினால் புலிகளுடன் பேச முடியுமா என்று எம்மிடம் கேட்டார், அவர்களிடம் கேட்டுத்தான் அந்த பதிலைச் சொல்ல முடியும் என்று அத்தோடு அக்கடிதத்தில் தங்களது குழு ஒன்று புலிகளை சந்தித்துப் பேசுவதற்கு தெளிவுபடுத்துவதற்கு, தயாராய் இருக்கின்றோம். அதற்கு முடியுமானாலும் அனுமதியைப் பெற்றுத் தரும்படியும் கேட்டிருக்கின்றார். நாம் பிரதமருடன் பேசியது சம் பந்தமாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் அவர்களுடன் தொடர்பு கொண்டு கதைக்க இருக்கின்றோம். ஏற்கனவே நேற்றுக் காலையில் நான் தொடர்பு கொண்டு கதைத்த போது கடிதம் தங்களுக்குக் கிடைத்ததாகவும் தாங்கள் அதை பரிசீலித்துக் கொண்டிருப்பதாகவும் தாங்கள் கேட்டதற்கமைய ஒரு இடைக்கால நிர்வாக அமைப்பு என்பது அதிலே இல்லை. அதிலே குறிக்கப்பட்டிருக்கின்றது. அவர் ஏற்கனவே தாங்களுக்கு அனுப்பிய அந்த திட்டத்தை கொஞ்சம் விரிவுபடுத்தி அனுப்பியிருக்கிறாரே ஒழிய எந்தவித மாற்றமுமில்லை என்று அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் அவர்களும் என்னிடம் தெரிவித்தார். புலிகள் கேட்டதைப் போன்ற ஒரு இடைக்கால நிர்வாக அமைப்பு அதில் புலிகள் தங்களது செயற்பாட்டை வடக்கு கிழக்கில் செய்யக் கூடிய அளவிற்கு அவர்களுக்கு சுதந்திரமான அதிகாரத்தோடு கிடைக்குமானால் அதை அவர்கள் பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்வார்கள் என்று நாம் நம்புகிறோம். புலிகளைப் பொறுத்து எவ்வளவோ வளைந்து கொடுக்கின்றனர். அதே போன்று அரசும் வளைந்து கொடுக்க முன்வரவேண்டும் என்றும் அவர் கூறினார்.

### டோக்கியோ..

கின் பாரியளவிலான புனரமைப்பு நடவடிக்கைகளுக்கும் செலவிடப்படும் என்றும் கூறப்படுகிறது.

உதவி வழங்கும் நாடுகளும் சர்வதேச கண்காணிப்பு நிறுவனமும் மூன்று ஆண்டுகளுக்கான பொருளாதார உதவியை இலங்கைக்கு வழங்கவிருக்கின்றன.

### பதவி விலக...

வேட்பாளர்களில் ஒருவரே அவ்வெற்றிடத்திற்கு நியமிக்கப்பட வேண்டும்.

இதற்கு முரணான நியமனங்கள் சட்டபூர்வமற்றதாகும். கடந்த மே 27ஆம் திகதி உச்சநீதிமன்றத்தினால் இந்த நியமனம் தொடர்பாக அளிக்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் வடமத்திய மாகாண முதலமைச்சர் பேர்ட்டி பிரேம்லால் திசாநாயக்கா உடனடியாக பதவி விலக வேண்டும் என மாகாண ஆளுநர் ஜி.பி.வி. சமரவீரவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

### மீனவர்கள்...

பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களை நேற்று விடுதலை செய்யுமாறு மன்னார் நீதவான் உத்தரவிட்டதை அடுத்து இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்கள் தலைமன்னார் ஊடாக சிறிலங்கா கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டு இராமேஸ்வரம் அனுப்பி வைக்கப்பட்டனர். (மி)

### திருமலையில்...

திருகோணமலை பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப் பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக திருகோணமலை பொலிசார் தீவிர விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

### உழவு இயந்திர...

குள் பின்நோக்கி உழவு இயந்திரம் குடைசாய்ந்தது குடைசாய்ந்த வேகத்தில் ஓட்டுநர் கிணற்றின் வெளியே தூக்கி வீசப்பட்டதால் ஆபத்தின்றித் தப்பித்துக் கொண்டுள்ளார்.

மேற்படி உழவு இயந்திரத்தை கிணற்றில் இருந்து மீட்பதற்கு பல தடவை முயன்றபோதும் நேற்று மாலை 3.00 மணிவரை மீட்கப்படவில்லை.

மேற்படி உழவு இயந்திரமானது முள்ளியவளை 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த க. செல்வானந்தம் என்பவருடையது என்பது குறிப்பிடத்தக்கது. (ஆ)

**ஒரு காலம் தமிழீழம் பொலிவோடு திகழ உணர்வோடு ஒருமரம் ஊரெல்லாம் நடுக**